தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மகசூல் இழப்பை தடுக்க யோசனைகள்



**தருமபுரி,**

பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்களைப் பற்றியும், அவற்றைக் கட்டுப்படுத்த கடைப்பிடிக்க வேண்டிய பயிர் பாதுகாப்பு முறைகளை தெரிந்து கொள்வதன் மூலம் மகசூல் இழப்பை விவசாயிகள் தடுக்க முடியும் என உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், ராகி, மக்காச்சோளம் மற்றும் பயறு வகைப் பயிர்கள் பல்வேறு வளர்ச்சி நிலையில் உள்ளன. இதில் நெல் பயிரைத் தாக்கும் குருத்துப் புழுக்களின் தாக்குதலால் பயிரின் வளர்ச்சி நிலையில் நடுக்குருத்து காய்ந்து விடும். கதிர் நிலையில் நெல்மணிகள் பதராகி கதிர்கள் வெண்மையாக இருக்கும். இதைக் கட்டுப்படுத்த இதன் முட்டைக் குவியல்களை சேகரித்தும், விளக்குப் பொறி வைத்தும் பூச்சிகளை கண்காணித்து அழிக்கலாம்.

இலை மடக்குப் புழு: இதன் தாக்குதலின் அறிகுறியாக இலைகளின் பச்சையம்

சுரண்டப்படுவதோடு, மடக்கப்பட்டு அதனுள் புழுக்கள் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கு மேல் தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும்.

பாக்டீரியல் இலைக்கருகல் நோய்: இந்த நோய் தாக்குதலால் இலைகள் நுனியிலிருந்து காய்ந்து கொண்டே வருவதுடன், நுனிப் பகுதி சருகு போல காணப்படும். இதைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் புளோரோசன்ஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம் நடவு செய்த 45-ஆவது நாளிலிருந்து 10 நாள் இடைவெளியில் தெளிக்கவும் அல்லது ஸிட்ரெப்டோமைசின் 120 கிராமுடன் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் மருந்தை தெளிப்பானுக்கு தக்கவாறு தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

கேழ்வரகு: தண்டு துளைப்பான் தாக்குதல் பயிரின் 20ஆம் நாளிலேயே தொடங்கி விடுவதால் 30 முதல் 40 நாள்கள் பயிரில் குருத்து காய்வது தெரியும். கார்பரில் 50 சதம் நனையும் தூள் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். அதேபோல, மிகவும் சிறியதான வெண்மை நிறம் கொண்ட வேர் அசுவினி பூச்சிகள் கேழ்வரகுப் பயிரின் வேர் பகுதியில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுவதால் பயிரின் வேர் பாதிக்கப்படுவதுடன் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இந்தப் பூச்சிகள் சாற்றை உறிஞ்சிக் கொண்டே தேன் போன்ற திரவப் பொருளை கழிவாக வெளியேற்றுகின்றன.

இதை உண்பதற்காக கறுப்பு எறும்புகள் பயிரில் அதிகம் நடமாடும், இந்த அறிகுறியைக் கொண்டே நோய்த் தாக்குதலை தெரிந்து கொள்ளலாம். இதைக் கட்டுப்படுத்த கார்பரில் 50 சதம் நனையும் தூள் 5 கிராம் அல்லது இமிடாகுளோப்ரிட் 0.5 மில்லி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கலாம்.

மற்றொரு கதிர்நாவாய்ப்பூச்சி பயிரின் கதிரில் மணிகள் பால் பிடிக்கும் தருணத்தில் சாற்றை உறிஞ்சி உண்பதால் மணிகள் சாவியாகி விடுகின்றன. இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 400 கிராம் கார்பரில் 50 சதம் நனையும் தூளை தேவையான அளவு தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.


மக்காச்சோளம்: பயிரை குருத்து ஈ சோளப் பயிரைப் போலவே விதைத்த முதல் வாரத்திலிருந்து நான்கு வாரங்கள் வரை தாக்கும். பயிரின் நடுக்குருத்தை துளைத்து உண்பதால் தாக்கப்பட்ட செடிகளின் நடுக்குருத்து வாடி காய்ந்து விடும். ஏக்கருக்கு 5 கருவாட்டுப் பொறிகளை பயிரின் 30வது நாள் ஆகும் வரை வயலில் வைத்து

ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். மீதைல் டெமட்டான் 25 இசி 200 மில்லி அல்லது டைமிதோயேட் 30 இசி 200 மில்லி அல்லது அசாடிராக்டின் ஒரு சதம் என்ற அளவில் ஏக்கருக்கு தெளித்து கட்டுப்படுத்தலாம்.

பயறு வகைப் பயிர்கள்: இதில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் மூன்று சத கரைசல் அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு டைமித்தோயேட் 2 மில்லி அல்லது மீதைல் டெமட்டான் 2 மில்லி அல்லது இமிடாகுளோப்ரிட் 0.5 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கலாம். மேலும் பயிரைத் தாக்கும் காய்ப்புழுக்களை கட்டுப்படுத்த டைகுளோர்வாஸ் 2 மில்லி அல்லது இன்டாக்சோகார்ப் ஒரு மில்லி அல்லது நோவுலரான் ஒரு மில்லியை தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இதுபோன்ற பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றினால் பூச்சி நோய்களில் இருந்து பாதிப்பை தவிர்த்து அதிக மகசூல் பெற்று விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம் என்றார் பெ.பாஸ்கர்.

## தென்னையில் கருந்தலைப் புழுவை கட்டுப்படுத்தும் முறைகள்...



**கோபி,**

கோடை காலங்களில் தென்னையில் மகசூல் இழப்பை ஏற்படுத்தும் கருந்தலைப் புழுக்களின் தாக்குதல் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து ஈரோடு மாவட்டம், சென்னிமலை வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி தெரிவித்துள்ளது:

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கியமான பயிர்களில் தென்னையும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 496.80 கோடி தேங்காய்கள் கிடைக்கின்றன. தென்னை ஓலைகள் கூரைகள் வேய்வதற்கும், வேலி அடைப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய பயனுள்ள தென்னை ஓலைகளை கருந்தலைப் புழுக்கள் தாக்கி சிதைத்து பயனற்றவைகளாகச் செய்துவிடுகின்றன. தென்னைகளைத் தாக்குகின்ற பூச்சிகளில் கருந்தலைப் புழு மிகவும் முக்கியமானது.

தென்னை மரத்தின் பொருளாதார முக்கியத்துவம் அதிகமாக இருப்பதால் கருந்தலைப் புழுக்கள் தாக்குதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கருந்தலைப் புழுக்கள் தாக்குதல் வருடம் முழுவதும் ஓரளவு காணப்பட்ட போதிலும் கோடை காலத்தில் (மார்ச் முதல் மே வரையில்) எல்லா வயது தென்னைகளிலும் தாக்குதல் மிக அதிகளவில் காணப்படுகிறது. காற்றில் ஈரப்பதம் அதிகமாக காணப்படும் காலநிலை இதன் இனப்பெருக்கத்திற்கு மிகவும் சாதகமானது.

கருந்தலைப் புழுக்களின் தாக்குதல் அதிகமாகக் காணப்படும் தென்னைகளில், முதிர்ந்த ஓலைகள் முழுவதும் காய்ந்து கரும் பழுப்பு நிறமடைந்து விடுகின்றன. தென்னை மரத்தின் நடு அடுக்கில் உள்ள 3-4 இளம் ஓலைகள் மட்டும் பச்சை நிறத்துடன் காணப்படும். கருந்தலைப் புழு தாக்குதல் ஏற்பட்ட ஓராண்டு காலத்தில், தென்னை மரத்திலுள்ள ஓலைகளின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்து விடுகின்றன. தென்னை ஓலைகளின் கீழ்ப் பக்கத்தில் ஓலை மடிப்புகளுக்கிடையே நூலாம் படையாலான கூண்டுக்குள் புழுக்கள் மறைந்து வாழ்கின்றன.

ஓலைகளிலிருந்து சுரண்டிய திசுக்களையும், புழுக்களின் கழிவுப் பொருட்களையும் சேர்த்து கருந்தலைப் புழுக்கள் வாயில் சுரக்கும் திரவத்திலான பசை நூலையும் கொண்டு பின்னப்பட்ட மெல்லிய நூலாம்படை போன்ற கூடுகளைக் கட்டுகின்றன.

கூட்டம் கூட்டமாக காணப்படுகின்ற கருந்தலைப் புழுக்கள், ஓலைகளிலுள்ள பச்சையத்தை சுரண்டித் தின்று விடுகின்றன.

அத்தகைய ஓலைகளில் நடைபெறுகின்ற ஒளிச்சேர்க்கை அளவு குறைந்து தேங்காய்கள் சிறுத்து விடுகின்றன. மகசூலும் குறைந்து விடுகிறது. கருந்தலைப்

புழுக்களால் தாக்கப்பட்டுள்ள தென்னைகளை தூரத்தில் நின்று பார்க்கும்போது அவற்றின் ஓலைகள் தீயில் கருகியது போன்ற தோற்றமளிக்கும்.

நெருக்கமாக தென்னைகள் நடவு செய்யப்பட்டுள்ள தோப்புகளில் கருந்தலைப் புழுக்களின் தாக்குதல் அதிகரித்துக் காணப்படுகிறது. தாய் அந்துப் பூச்சிகள் பறந்து சென்று மற்ற தென்னைகளில் முட்டைகள் இடுவதால் இப்பூச்சி பரவுகிறது. நோய் தாக்கப்பட்ட ஓலைகளை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதன் மூலமும் இப் பூச்சி பரவுகிறது.

இத்தகைய புழுக்களை அழிப்பதற்காக கைவினை முறை, ரசாயன பூச்சிக்கொல்லி முறை, உயிரியல் முறைகளை ஒருங்கிணைத்து கடைப்பிடிக்க வேண்டும்.

1.கைவினை முறை: தென்னை மரத்தின் தலைப் பகுதியில் அடிமட்ட அடுக்குகளில் காணப்படும் அதிக சேதமடைந்துள்ள 2-3 காய்ந்த ஓலைகளை வெட்டி தீயிட்டு எரித்துவிட வேண்டும். அதன் மூலமாக அந்த ஓலைகளிலுள்ள லார்வா புழுக்கள், கூட்டுப் புழுக்கள் மற்றும் முட்டைகள் கருகி அழிந்துவிடும். மற்ற தென்னைகளுக்கு பூச்சிகள் பரவுவது குறைந்துவிடும்.

2.ரசாயன முறை: ரசாயன பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி பூச்சிகளை அழிக்க வேண்டும். அதற்கு 2 மி.லி. டைகுளோர்வாஸ் பூச்சிமருந்து அல்லது 5 மி.லி. மாலத்தியான் மருந்து அல்லது 5 மி.லி. பாஸலோன் பூச்சிமருந்தும், 1 மி.லி. ஓட்டும் திரவத்தையும், ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து, பூச்சி மருந்து கலவை தயார் செய்து தெளிக்க வேண்டும். ஒரு தென்னைக்கு 15 லிட்டர் மருந்துக் கலவையை புழுக்களால் தாக்கப்பட்டுள்ள ஓலைகளின் கீழ் பக்கத்தில் உள்ள நூலாம்படைகள் மீது நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.

வேர் மூலமாக மருந்தை செலுத்துதல்: உயரமான தென்னைகள் மீது பூச்சி மருந்தை தெளிப்பது சற்று சிரமமான செயலாகும். எனவே, பூச்சி மருந்தை வேர் மூலமாக தென்னையினுள் செலுத்தி கருந்தலைப் புழுக்களை அழிக்கும் முறை உருவாக்கப்பட்டுள்ளது.

வேர் மூலமாக உறிஞ்சப்பட்ட பூச்சிமருந்து தென்னையின் தலைப்பகுதியில் உள்ள ஓலைகளில் பரவி பூச்சிகளை அழிக்ககூடிய நச்சுத்தன்மை ஏற்பட்டு விடுகிறது. இதனால், கருந்தலைப் புழுக்கள் மடிந்து விடுகின்றன.

வேர் மூலமாகச் செலுத்தப்பட்ட பூச்சிமருந்தின் நச்சுத்தன்மை 45 நாட்கள் வரையில் தென்னையில் காணப்படுகிறது. எனவே, வேரில் பூச்சிமருந்து செலுத்தப்பட்ட 45 நாட்கள் கழித்த பின்னர்தான் தேங்காய் அல்லது இளநீர் காய்களை அறுவடை செய்ய வேண்டும். வேர் மூலமாக பூச்சிமருந்து செலுத்தப்பட்ட தென்னைக்கு ஒரு வாரத்திற்கு தண்ணீர் பாய்ச்சக் கூடாது.

3.உயிரியல் முறை: கருந்தலைப் புழுக்களையும் அதன் கூட்டுப் புழுக்களையும் அழிக்கக்கூடிய ஒட்டுண்ணிகள் இயற்கையில் காணப்படுகின்றன. அந்த ஒட்டுண்ணிகள் ஆய்வுக்கூடத்தில் இனப்பெருக்கம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன். இதன் மூலமாக கருந்தலைப் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.

தென்னந் தோப்புகளில் கருந்தலைப் புழு தாக்குதல் எந்த நிலையில் உள்ளது என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப கீழ்க்கண்ட ஒட்டுண்ணிகளைத் தேர்வு செய்து தேவையான அளவில் 15 நாட்கள் இடைவெளியில், 5 அல்லது 6 முறைகள் தொடர்ந்து விட வேண்டும்.

கருந்தலைப் புழுக்கள், புழுப்பருவத்தில் இருக்கும்போது பிராக்கோனிட் மற்றும் பெத்திலிட் ஓட்டுண்ணிகளை மரம் ஒன்றுக்கு முறையே 20 மற்றும் 10 ஓட்டுண்ணிகள் வீதம் விட வேண்டும். தென்னை மரத்தில் பூச்சிமருந்து தெளிக்கப்பட்டிருந்தாலோ அல்லது வேர் மூலமாக மருந்து செலுத்தப்பட்டிருந்தாலோ 21 நாட்கள் கழிந்த பின்னர்தான் ஒட்டுண்ணிகளை விட வேண்டும். மழை பெய்யாத நேரத்தில் மற்றும் அதிகமாக காற்று வீசாத நேரத்தில்தான் ஒட்டுண்ணிகளை விட வேண்டும்.

கருந்தலைப் புழுக்களைத் தின்று அழிப்பதில் பரீனா எனப்படும் கராபிட் புழுக்களும், அதன் வண்டுகளும் திறமைசாலிகள். எரிபோரஸ் என்ற குளவியும் சிறந்தது. இருப்பினும், ஒரு சில வகை ஒட்டுண்ணிகள் மட்டுமே ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்களில் பெருமளவில் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன. இதன் மூலமாக கருந்தலைப் புழுக்களை நல்ல முறையில் கட்டுப்படுத்த முடிகிறது. இந்த உயிரியல் கட்டுப்பாடு முறை மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

**உணவு தானிய உற்பத்தியில் 5.5 மில்லியன் டன் வளர்ச்சி தேவை**



**திண்டுக்கல்,**

உணவு தானிய உற்பத்தியில் ஆண்டொன்றுக்கு 5.5 மில்லியன் டன் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறைச் செயலர் வி.கே. சுப்புராஜ் தெரிவித்தார்.

திண்டுக்கல் அடுத்துள்ள காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெறுவதற்காக, "தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வேளாண்மை அறிவியல் மையங்களின் தாக்கம்' என்ற தலைப்பில் புதன்கிழமை ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து, அவர் ஆற்றிய உரை:

சுதந்திரம் அடைந்தபோது நாட்டின் உணவு உற்பத்தி 48-49 மில்லியன் டன்னாக இருந்தது. வெளிநாடுகளிலிருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்படும் கோதுமை மற்றும் சோளத்துக்காக காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. அதனைத் தவிர்க்கும் வகையில், உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

அதன் ஒருபகுதியாக, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, 1974 ஆம் ஆண்டு வேளாண்மைப் பயிற்சி மையம் (கேவிகே) முதன்முதலாக புதுச்சேரியில் துவக்கப்பட்டது. கேவிகே மையங்கள் குறித்து விவசாயிகள், பெண் விவசாயிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் என சுமார் 3 ஆயிரம் பேரிடம் கருத்துக் கேட்கப்பட்டது. இதன்மூலம், விவசாயிகளுக்கு வகுப்பறைகளில் நடைபெறும் பயிற்சியை விட வயல் வெளியில் அளிக்கப்படும் செயல்முறை விளக்கமே அவசியம் என்பது தெரிய வந்துள்ளது.

நாட்டின் உணவு உற்பத்தி தற்போது 263 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. தற்போது முதல் உணவு தானிய உற்பத்தியை ஆண்டுக்கு 5.5 மில்லியன் டன்னாக அதிகரித்தால் மட்டுமே 2030இல் இலக்கை எட்ட முடியும் என்றார் அவர். விவாதத்துக்குப் பிறகு முனைவர் பட்டம் பெறுவதற்கு வி.கே. சுப்புராஜ் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்திரா காந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பி.எஸ். ஹான்ஸ்ரா உள்ளிட்ட பலரும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

**நெல் உள்ளிட்ட அனைத்து வகை பயிர்களுக்கும் காப்பீடு**

**மதுரை,**

மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் நெல் உள்ளிட்ட அனைத்து வகையான பயிர்களுக்கும், பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் அறிவித்துள்ளாÔó.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி: நெல், நிலக்கடலை, பாசிப் பயறு, மக்காச்சோளம், எள், மிளகாய், வெங்காயம், வாழை பயிரிட வங்கிக் கடன் பெறும் விவசாயிகள் மற்றும் வங்கிக் கடன் பெறாத விவசாயிகள் பிப்.28 ஆம் தேதிக்குள்ளும், கரும்பு பயிரிட வங்கிக் கடன் பெறும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் ஜூன் 30 ஆம் தேதிக்குள்ளும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம்.

தவிர்க்க இயலாத இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு பயிர்க் காப்பீடு வழங்கப்படும்.

பயிர் வாரியாக காப்பீடு செய்யப்படும் குறுவட்டங்கள் (பிர்கா) விவரம்:

நெல் - சக்கிமங்கலம், குன்னத்தூர், அப்பன்திருப்பதி, அரும்பனூர், திருப்பரங்குன்றம், தென்கரை, தனிச்சியம், வாலாந்தூர், சிந்துபட்டி, கூழப்பாண்டி, சத்திரப்பட்டி, குலமங்கலம், சமயநல்லூர்.

நிலக்கடலை - உசிலம்பட்டி, பாசிப்பயறு - டி.கல்லுப்பட்டி, சேடப்பட்டி, அத்திப்பட்டி, எழுமலை, மக்காச்சோளம் - மோதகம், டி.கல்லுப்பட்டி, சேடபட்டி, அத்திப்பட்டி, எழுமலை, மிளகாய் - சேடப்பட்டி, அத்திப்பட்டி, பன்னிக்குண்டு,

சிவரக்கோட்டை, எள் - அத்திப்பட்டி, எழுமலை, வெங்காயம் - பாலமேடு, பேரையூர், சேடபட்டி.

வாழை - நாகமலை புதுக்கோட்டை, மதுரை மேற்கு, மேலூர், கீழவளவு, வெள்ளலூர், நீரேத்தான், தென்கரை, சோழவந்தான், தனிச்சியம், முடுவார்பட்டி, பாலமேடு, சத்திரப்பட்டி.

கரும்பு - கள்ளந்திரி, கீழவளவு, திருவாதவூர், வெள்ளலூர், தனிச்சியம், அலங்காநல்லூர், முடுவார்பட்டி, பாலமேடு, உத்தப்பநாயக்கனூர், உசிலம்பட்டி, கருமாத்தூர், வாலாந்தூர், சிந்துபட்டி, மோதகம், அத்திப்பட்டி, எழுமலை, சத்திரப்பட்டி ஆகிய குறுவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

பயிர் காப்பீடு செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பிரீமியத்துக்கான விகிதம், மானியம் உள்ளிட்ட விவரங்களை வேளாண் துறை அலுவலகங்கள், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் தெரிந்து கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

**பரமக்குடியில் உழவர் தினவிழா**

**பரமக்குடி,**

பரமக்குடி உழவர் பயிற்சி நிலையத்தில் வேளாண்மைத் துறை சார்பில் உழவர் தினவிழா புதன்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு வேளாண்மை துணை இயக்குநர் என்.வி. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குநர் எஸ். சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். எஸ்.எம். உதுமான்முகைதீன் வரவேற்றார்.

மாவட்டத்தில் வறட்சியின் சூழலுக்கேற்ற சிறு குறு தானியங்களை சாகுபடி செய்யும் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சியினை மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் துக்கையண்ணன் விளக்கினார். மக்காச்சோளம், பயறு வகை சாகுபடி தொழில் நுட்பம் குறித்து ஆனந்த் பேசினார்.

இதனைத் தொடர்ந்து 35-க்கும் மேற்பட்ட விவசாயிகள் விளைவித்த சிறந்த விவசாய விளைபொருள்களுக்கான போட்டி நடைபெற்றது. இதில் நடவு முறையில் துவரை சாகுபடி செய்த கமுதக்குடியைச் சேர்ந்த போதுமணி முதலிடமும், மிளகாய் மற்றும் காய்களை விளைவித்த வெங்காளூர் முத்து

இரண்டாமிடமும், உளுந்து பயறு சாகுபடிக்கு கருத்தனேந்தல் சுசிலா மூன்றாமிடமும் பெற்றனர். இவர்களுக்கான பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பின்பு உழவர் மன்ற அமைப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் மேலாக வேளாண் திட்டங்களின் பயன்கள் விவசாயிகளுக்கு சென்றடைவதில் பெரும் பங்கு வகிக்கும் விவசாயிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் வறட்சியை தாங்கி வளரக்கூடிய 1 கிலோ வீரிய ஒட்டு ரக மக்காச்சோள விதைகள் வழங்கப்பட்டன. வேளாண்மை உதவி இயக்குநர் ச.கண்ணையா நன்றி கூறினார்.

### பெருந்துறையில் ரூ. 33 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 33 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்போனது. பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரம்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. புதன்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், 776 மூட்டைகளில், 38 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டுவந்திருந்தனர். இதில், முதல்தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 86.75-க்கும், அதிகபட்சமாக ரூ. 89.50-க்கும் ஏலம் போனது. இரண்டாம்தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 64.35-க்கும், அதிகபட்சமாக ரூ. 84.75-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 33 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 44.21 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 44.21 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 322 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.19 டி.எம்.சி.

**சத்தியில் மரவள்ளி அறுவடை தீவிரம்**

**சத்தியமங்கலம்,**

சத்தியமங்கலம் வட்டார விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

சத்தியமங்கலம் வட்டாரப் பகுதிகளான ஆலத்துக்கோம்பை, சிவியார்பாளையம், கே.என்.பாளையம், செண்பகபுதூர், சிக்கரசம்பாளையம், பெரியகுளம், ராமபைலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கு அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

சமவெளிப் பகுதியான சத்தியமங்கலம் வட்டாரத்தில், கிணறு, ஆற்றுப்பாசனம் மூலம் 10 மாதகாலப் பயிரான மரவள்ளிக் கிழங்கு நடவு செய்யப்பட்டு 3 மாதங்கள் வரை 10 நாட்களுக்கு ஒருமுறையும், அதன்பிறகு 15 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் பாய்ச்சப்படுகிறது.

உழவுக்கூலி, களைவெட்டுதல், உரமிடுதல் உள்ளிட்ட செலவினங்கள் உள்பட ஒரு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் வரை செலவாகிறது. மரவள்ளிக் கிழங்கு டன் ஒன்றுக்கு ரூ. 11 ஆயிரம் முதல் ரூ. 12 ஆயிரம் வரை விற்கப்படுகிறது.

சிவியார்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சுப்பிரமணியம் கூறியது: மலைப்பகுதியில் மட்டுமே மானாவாரிப் பயிராக மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்து வந்தனர். மலைப்பகுதியை விட கூடுதல் மகசூல் கிடைப்பதாலும், மரவள்ளிக் கிழங்கிற்கு தற்போது நல்ல விலை கிடைப்பதாலும், பெரும்பாலான விவசாயிகள் மரவள்ளிக்கு மாறிவிட்டனர்.

மரவள்ளிக் கிழங்குச் செடிகளை அறுவடை செய்யும் பணியை அந்தியூர் மற்றும் பூனாச்சி உள்ள சேகோ நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மரவள்ளிக் கிழங்கு அறுவடையில் ஈடுபடுகின்றனர். இந்த ஆண்டு மரவள்ளிக் கிழங்கு லாபகரமான விவசாயப் பயிராக உள்ளது என்றார்.

**தேசிய உணவுப் பதப்படுத்துதல் இயக்கக் கருத்தரங்கம்**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலையில் தேசிய உணவுப் பதப்படுத்துதல் இயக்கத் திட்டம் குறித்த மாநில அளவிலான ஒரு நாள் கருத்தரங்கை மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இணைந்து நடத்தும் இக் கருத்தரங்குக்கு வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் இரா.பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் என்.பன்னீர்செல்வம், நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் சுதர்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆட்சியர் அ.ஞானசேகரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசுகையில், முதல்வர் ஜெயலலிதா விவசாயத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் வகையில் தமிழகத்தில் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இத் திட்டங்களை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வது அவசியம். தேசிய உணவுப் பதப்படுத்துதல் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் புதிய உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க 25 சதவீத மானியத்தில் மொத்த மதிப்பீட்டில் அதிகபட்சமாக ரூ.50 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. பால், முட்டை, இறைச்சி, காய்கறிகள், பழங்களைப் பதப்படுத்தி விற்க குளிர்ப்பதன சங்கிலி என்ற திட்டத்தின் கீழ் 35 சதவீத மானியத்தில் மொத்த மதிப்பீட்டில் அதிகபட்சமாக ரூ.5 கோடி வரை மானியம் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற பல்வேறு திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்தி தங்களின் வாழ்க்கையில் முன்னேறலாம். இக் கருத்தரங்கில் தெரிவிக்கும் கருத்துகளைப் பின்பற்றி, வேளாண் வணிகத் துறையை அணுகி தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தின் பயன்களைப் பெறலாம் என்றார்.

இக் கருத்தரங்கில், வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மைய செயல் இயக்குநர் செல்வம், சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு செயல் இயக்குநர் பாலசௌந்தரி, இந்திய பயிர் பதனிடும் தொழில்நுட்பக் கழக உதவிப் பேராசிரியர் ஹேமா, வேளாண் வணிக மேலாண்மை அலுவலர்

விஜயசாந்தி, வேளாண் வணிக இணை இயக்குநர் கக்கன், ஒழுங்கு முறை விற்பனைக் கூட செயலாளர் சுரேஷ்பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கக் கருத்தரங்கு**

**தருமபுரி,**

தருமபுரியில் தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கக் கருத்தரங்கை மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் புதன்கிழமை தொடக்கிவைத்தார்.

தருமபுரி தனியார் ஹோட்டலில் வேளாண்மை விற்பனை, வணிகத் துறை சார்பில் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், கரூர் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கிய மண்டல அளவிலான உணவுப் பதப்படுத்தும் தொழில் செய்வோர், புதிய தொழில் முனைவோருக்கான கருத்தரங்கை தொடக்கிவைத்து ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது:

வேளாண் உற்பத்தி தொடர்புடைய தொழில்கள் செய்வதற்கு தருமபுரி மாவட்டம் ஏற்றதாக திகழ்கிறது. இந்த மாவட்டத்தை சிறுதானியங்கள் மாவட்டம் என சொல்லக் கூடிய அளவுக்கு அதிகளவில் சிறுதானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. சிறுதானிய உற்பத்தியில் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட 17 பேரில் 13 பேர் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

அதேபோல, காரிமங்கலம், பாலக்கோடு பகுதிகளில் அதிகளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. தோட்டக்கலை துல்லிய பண்ணைத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது.

மாவட்டத்தில் புளி உற்பத்தி அதிகளவில் உள்ளதோடு, வட மாநிலங்களில் இருந்தும் அதிகளவில் கொண்டு வரப்பட்டு பதப்படுத்தி ஏற்றுமதிக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

உணவுப் பதப்படுத்தும் தொழில்களை செய்ய ஏதுவாக தொழில் துறை மூலம் வங்கி கடனுதவி, வழிகாட்டுதல் அளிக்கப்படுகின்றன. சாலை, போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் சிறப்பாக உள்ளதோடு, மனிதச் சக்தியும் அதிகளவில் உள்ளது.

புதிய உணவுப் பதப்படுத்துதல் தொழில்சாலைகள் அமைக்க தளவாடங்கள், தொழில்நுட்ப கட்டுமானப் பணிகளுக்கு அதிகபட்சமாக ரூ.50 லட்சம் கடனுதவி 25 சத மானியத்தில் அளிக்கப்படுகிறது.

குளிர்பதன சங்கிலி அமைக்க 35 சத மானியத்தில் ரூ.5 கோடி வரையும், குளிர்பதன வாகனத்துக்கு 50 சத மானியத்துடன் ரூ.50 லட்சம், ஊரகப் பகுதியில் பதப்படுத்தும் நிலையம், சேகரிப்பு மையம் அமைக்க திட்ட மதிப்பில் 50 சத மானியத்துடன் அதிகபட்சமாக ரூ.2.50 கோடி கடனுதவி அளிக்கப்படுகிறது.

எனவே, உணவுப் பதப்படுத்தும் தொழில் செய்வோர், தொழில் முனைவோர்கள் இதைப் பயன்படுத்தி புதிய தொழில்களை தொடங்க முன்வர வேண்டும் என்றார் அவர்.

வேளாண் வணிக துணை இயக்குநர்கள் இ.செல்வம், பரணி, அண்ணா பல்கலைக்கழக பேரிடர் மேலாண்மை மைய இயக்குநர் எஸ்.ராஜரத்தினம், மைசூர் மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி மைய விஞ்ஞானி வி.வேலு, மதுரை மனையியல் கல்லூரி முதுநிலை ஆராய்ச்சியாளர் ஆர்.நாகஜோதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கையொட்டி, மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் உற்பத்திப் பொருள் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

**தேன்கனிக்கோட்டை அருகே பிடிபட்ட அரிய வகை மலை ஆடு**

**ஒசூர்,**

தேன்கனிக்கோட்டை அருகே ஊருக்குள் புகுந்த அரிய வகை ஆடு புதன்கிழமை பிடிபட்டது.

இந்த வகை ஆடுகள் மலை உச்சியில் மட்டுமே காணப்படும். மானைப் போல இந்த ஆடு தோற்றம் இருக்கும். ஆனால், நாயை போல குரைக்கும். இந்த அரிய வகை ஆடு புதன்கிழமை தேன்கனிக்கோட்டை ஆனந்தராஜ் வீட்டிற்கு அருகே வந்தது. இதுகுறித்து தேன்கனிக்கோட்டை வனத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. வனத் துறையினர் அந்த அரிய வகை ஆட்டைப் பிடித்து ஜவளகிரி காட்டில் விட்டனர்.

## வேளாண் மற்றும் கூட்டுறவுத் துறை சார்பில் 780 பயனாளிகளுக்கு ரூ. 1.96 கோடி உதவிகள்

**திருச்சி,**

திருச்சி வேளாண் துறை மற்றும் கூட்டுறவுத் துறைகளின் சார்பில் 780 பேருக்கு ரூ. 1.96 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை அரசுத் தலைமைக் கொறடா ஆர். மனோகரன் செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

அப்போது பேசிய மனோகரன், சிறீரங்கம் தொகுதிக்கு மட்டும் கடந்த 3 ஆண்டுகளில் ரூ. 250 கோடி நிதியை முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கீடு செய்துள்ளார் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் வேளாண் துறை சார்பில் 150 பேருக்கு ரூ. 18.90 லட்சத்திலும், தோட்டக் கலைத் துறை சார்பில் 12 பேருக்கு ரூ. 3.5 லட்சத்திலும், வேளாண் பொறியியல் துறை சார்பில் 24 பேருக்கு ரூ. 14.42 லட்சத்திலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், திருச்சி ஆவின் நிறுவனத்துக்கு 80 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர்பதன அறை அமைக்க ரூ. 16.97 லட்சம் வழங்கப்பட்டது. மகளிர் திட்டம் சார்பில் ஊராட்சி ஒன்றிய அளவிலான குழுக் கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் ரூ. 25 லட்சம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மேற்குத் தொகுதி எம்எல்ஏ மு. பரஞ்ஜோதி, துணை மேயர் மரியம் ஆசிக், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ஜி. ராஜேந்திரபிரசாத், வேளாண் இணை இயக்குநர் பி. குருராஜ்சிங், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாண்டியராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ரூ. 14.5 கோடியில் புனரமைப்புப் பணிக்கு பூமிபூஜை

**அரியலூர்,**

அரியலூர் மாவட்டம், தா.பழூர் அருகே சுத்தமல்லி நீர்த்தேக்கத்தில் ரூ. 14.5 கோடியில் புனரமைப்புப் பணிகள் புதன்கிழமை தொடங்கின.

தா.பழூர் ஒன்றியம், கார்குடியில் அமைந்துள்ள சுத்தமல்லி நீர்த்தேக்கம் கடந்த 1991-ல் ரூ. 4.79 கோடியில் புதுப்பிக்கப்பட்டது. மீண்டும் இந்த அணையை

புனரமைக்க வேண்டும் என்று விவசாயிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதைத் தொடர்ந்து, மத்திய நீர்வள ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டு உலக வங்கி நிதி உதவியுடன் அணைகள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 14.52 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரத் துறை, நீடுர் காவிரி வடிநில வட்டம், திருச்சி மற்றும் அரியலூர், ஜயங்கொண்டம் மருதையாறு வடிநிலக் கோட்டம் மூலம் பணி மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டது. இந்தப் பணி தொடக்க விழா புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் பைந்தமிழ்ச்செல்வன், செயற்பொறியாளர் சீனிவாசன், உதவிச் செயற்பொறியாளர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து, பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தது: சுத்தமல்லி நீர்தேக்க அணையின் மூலம் நேரடி மற்றும் ஏரிகளின் வாயிலாக சுமார் 5 ஆயிரத்து 80 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. இந்த அணை கட்டப்பட்டு சுமார் 25 ஆண்டுகள் ஆவதால், அணையின் கரைகள் பலவீனமடைந்து அதன் முழுக் கொள்ளளவுக்கு நீர் தேக்க இயலாத நிலை இருக்கிறது. இந்தப் புனரமைப்புப் பணியின் மூலம் கரையை பலப்படுத்துதல், புதியரக உபரி நீர்ப் போக்கி அமைத்தல், கதவணைகள் பழுது பார்த்தல், 2 தரைப்பாலம் அமைத்தல் அணையின் உட்புறம் உள்ள கரையில் பழுதுபார்த்தல், மற்றும் மின் வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதன்மூலம், வெள்ளக் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க முடியும் என்றனர்.

## மார்ச் 1 முதல் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களிலும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் மார்ச் 1-ம் தேதி முதல் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட தகவல்: கால்நடை பராமரிப்புத் துறையினரால் 6-ம் கட்டமாக கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணிகள் 1.3.2014

முதல் 21.3.2014 வரை 21 நாட்களுக்கு காலை 6 மணி முதல் 9 மணி வரையும் மற்றும் மதியம் 3 மணி முதல் 5 மணி வரையிலும் மேற்கொள்ளப்பட உள்ளது. தடுப்பூசிப் பணிக்குழு கிராமங்களுக்கு வரும் நாள் விவரம் அனைத்து ஊராட்சித் தலைவர்களுக்கும் முறைப்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### திருந்திய நெல் சாகுபடி முறையில் கோடை நெல் சாகுபடி

**புதுக்கோட்டை,**

அதிக உற்பத்தித் திறனளிக்கும் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப முறையில், கோடை நெல் சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறலாம் என வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தற்போது சம்பா அறுவடைப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தண்ணீர் வசதி உள்ள இடங்களில் கோடை நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் தயாராகி வருகின்றனர். கோடை நெல் சாகுபடிக்கு ஆடுதுறை- 43, ஆடுதுறை- 45, ஆடுதுறை- 37, ஆடுதுறை- 36 போன்ற குறுகிய கால ரகங்களை சாகுபடி செய்யலாம்.

கடந்த ஆண்டு மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை இயல்பான மழையளவைவிடக் குறைவாகப் பெய்ததால், நிலத்தடி நீர் குறைய வாய்ப்புள்ளது. எனவே, இருக்கும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, நெல் சாகுபடி செய்ய திருந்திய நெல் சாகுபடி முறையில் கோடை நெல் சாகுபடி செய்ய வேண்டும்.

நெல் விளைச்சலில் உற்பத்தித் திறனை அதிகரிக்க, கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பமான திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்தால், ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 9 ஆயிரம் கிலோ மகசூல் கிடைக்கிறது.

எனவே, பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்ட திருந்திய நெல் சாகுபடி முறையை புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நடப்பு கோடைப் பருவத்தில் கடைப்பிடித்து குறைந்த தண்ணீர், குறைந்த செலவில் கூடுதல் மகசூல் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி வட்டார வேளாண் விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**வடவார் நீட்டிப்பு கால்வாய் நவீனப்படுத்தும் பணிகள் தொடக்கம்**

**நீடாமங்கலம்,**

நீடாமங்கலம் ஒன்றியம், மூவர்கோட்டை கிராமத்தில் தொடங்கும் வடவார் நீட்டிப்பு கால்வாய் ரூ. 23 கோடி நபார்டு வங்கி நிதியுதவியுடன் நவீனப்படுத்தும் பணி புதன்கிழமை தொடங்கியது.

பொதுப்பணித் துறையின் தஞ்சாவூர் கீழ்காவிரி வடிநில வட்ட கண்காணிப்பு பெறியாளர் சி. சம்பத் வெண்ணாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் ஆர். குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் பணிகள் தொடங்கின.

இதன்மூலம் 15 ஆயிரத்து 176.49 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இதன் மூலம் வடுவூர் வடபாதி, வடுவூர் மேல்பாதி, மூவர்கோட்டை, புள்ளவராயன் குடிகாடு, எடமேலையூர், எடகீழையூர், செட்டிசத்திரம், வடுவூர் புதுக்கோட்டை, பேரையூர், கட்டக்குடி, கன்னியாக்குறிச்சி, கீழநெம்மேலி, மேலநெம்மேலி,கீழத்திருப்பாலக்குடி, மேலதிருப்பாலக்குடி, உள்ளிக்கோட்டை, பரவாக்கோட்டை, மேலநத்தம், கீழக்குறிச்சி, எளவனூர், மகாதேவப்பட்டினம், பாலையூர், கண்டிதம்பேட்டை, ஆவிக்கோட்டை, திருமக்கோட்டை ஆகிய கிராமங்கள் பயன் பெறும்.

**பெரம்பலூரில்மானிய விலையில்50 பேருக்கு புல் நறுக்கும் கருவிகள்**

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் கால்நடை மருந்தகத்தில், தீவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 50 நபர்களுக்கு மானிய விலையில் ரூ. 8.70 லட்சத்தில் புல் நறுக்கும் கருவிகள் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

கால்நடை பராமரிப்புத் துறை மூலம் 2013- 2014-ம் ஆண்டிற்கான மாநில தீவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தலா ரூ. 17,400 மதிப்பீட்டில், 50 பயனாளிகளுக்கு

மானியத்துடன் ரூ. 8.70 லட்சம் மதிப்பிலான புல் நறுக்கும் கருவிகளை மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வழங்கினார்.

நிகழ்ச்சியில், பெரம்பலூர் நகர்மன்றத் தலைவர் சி. ரமேஷ், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் மனோகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**டெல்டா மாவட்டங்களில் ஜூனில் சீரமைப்பு பணி : 23 ஆண்டுகளுக்கு பின் துவக்கம்**



காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பு, அரசிதழில் ?வளியானதைத் தொடர்ந்து, டெல்டா மாவட்டங்களில் சீரமைப்பு பணிக்கான தொகையை, கடனுதவியாக வழங்க, ஆசிய வளர்ச்சி வங்கி, ஒப்புதல் அளித்துள்ளது. இதை தொடர்ந்து, 23 ஆண்டுகளுக்குப் பிறகு, காவிரி டெல்டா மாவட்டங்களில், ஜூன் மாதம், சீரமைப்பு பணி துவங்க உள்ளது. காவிரி பிரச்னை, 23 ஆண்டுகளாக நீடித்து வந்தது. இதனால், டெல்டா மாவட்டங்களில், எந்த சீரமைப்பு பணியும் மேற்கொள்ளப்படவில்லை. டெல்டா பகுதிகளில், 39 ரெகுலேட்டர்கள்; கடைமடை பகுதி களில், கிளை வாய்கால்களில் பொருத்தப்பட்டுள்ள 39 ரெகுலேட்டர்களை, புரனரமைக்க வேண்டியது, மிக முக்கியமானது. கடந்த ஆண்டு, காவிரி நடுவர்

மன்ற இறுதி தீர்ப்பு, அரசிதழில் வெளியானது. இதைத் தொடர்ந்து, டெல்டா மாவட்டங்களில், சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள, ஆசிய வளர்ச்சி வங்கியிடம், 1,560 கோடி; உலக வங்கியிடம், 13,560 கோடி ரூபாய், தமிழக அரசு, கடனுதவி கேட்டது. உலக வங்கி கடனுதவி வழங்க, இழுத்தடித்து வருகிறது. எனினும், ஆசிய வளர்ச்சி வங்கி, கடனுதவி வழங்க, ஒப்புதல் அளித்தது. இரண்டு மாதங்களுக்கு முன், ஆசிய வளர்ச்சி வங்கி அதிகாரிகள், டெல்டா மாவட்டங்களில், ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வுக்கு பின், ஒப்புதல் அளித்தனர். இதை தொடர்ந்து, ஜூன் மாதம், சீரமைப்பு பணி துவங்க உள்ளது. வாய்க்கால்கள் மற்றும் கால்வாய்களை, உரிய தரத்துக்கு கொண்டு வருதல்; தூர் வாரி, ஒழுங்குப்படுத்தி, கரைகளை மேம்படுத்துதல்; குளம் குட்டைகளை மேம்படுத்துதல்; நீரேற்று பாசன அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள்,1,560 கோடி ரூபாய் செலவில், மேற்கொள்ளப்படும். இதற்கு, மாநில அரசின், பங்குத் தொகையாக, 468 கோடி ரூபாய் அளிக்கப்படும்.

பலன்கள் என்ன? : பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியதாவது: இத்திட்டத்தை செயல்படுத்தினால், டெல்டா பகுதிகளில், கடலோர நிலப் பகுதிகளில், பாதுகாப்பு உறுதி செய்யப்படும். திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தின் ஒரு பகுதியில் உள்ள, காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய் மற்றும் கீழ்கொள்ளிடம் அணைக்கட்டைச் சேர்ந்த, 4.50 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## அணைக்கரை கீழணை பாலத்தில் மீண்டும் விரிசல் : சீரமைப்பு மேற்கொள்ள 49 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு

தஞ்சாவூர் மாவட்டம், அணைக்கரையில் உள்ள, கீழணை பாலத்தில், நான்காவது முறையாக ஏற்பட்ட விரிசலை, சரி செய்ய, 49 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம், பணி துவங்குகிறது. கொள்ளிடம் ஆற்றில், மழைக்காலங்களில் வெள்ளமாகவும், கோடை காலங்களில் கால்வாய் வழியாகவும், தண்ணீர் வீணாக கடலில் கலந்து விடுகிறது. தண்ணீரை தேக்கி வைத்து, விவசாயத்துக்கு பயன்படும் நோக்கில், தஞ்சை மாவட்டம், அணைக்கரையில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே,

1836ல், கீழ் அணை கட்டப்பட்டது. அதன்மூலம், 4.5 லட்சம் கனஅடி நீர், பாசனத்துக்கு பயன்படுத்தப்படுகிறது. கீழணை மூலம், வடக்குராஜன் ஆறு, தெற்கு ராஜன் ஆறு, குமுக்கி மண்ணியாறு, குறுவாய்க்கால்கள் என, பிரிக்கப்பட்டு, 1.26 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. அதுமட்டுமின்றி, சென்னைக்கு குடிநீர் வழங்கும், வீராணம் ஏரிக்கு, இங்கிருந்தே, தண்ணீர் பெறப்படுகிறது. தென் மாவட்டம், வடமாவட்டங்களை பிரிக்கும் பகுதியில், இந்த அணை அமைந்திருப்பதால், வட மாவட்டங்களில் உள்ள பகுதிகளை பார்வையிடவும், பாலத்தின் பராமரிப்பை அறியவும், அங்கு பாலம் அமைக்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்ற பின், அப்பாலம் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்டது. தினமும், ஆயிரக்கணக்கான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதால், 2010ல், முதல் முறையாக, பாலத்தில் விரிசல் ஏற்பட்டது; ஒரு சில மாதங்களில், சரி செய்யப்பட்டது. அதன் பின், அடுத்தடுத்த ஆண்டுகளில், விரிசல் ஏற்பட்டது. கடைசியாக, கடந்த ஆண்டு, நான்காவது முறையாக, விரிசல் ஏற்பட்டது. இந்நிலையில், பாலம் சீரமைப்புக்கு, 49 லட்சம் ரூபாய், ஒதுக்கப்பட்டுள்ளது. சீரமைப்பு பணி, அடுத்த வாரம் துவங்குகிறது.

## உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்பம் இருந்தும் கரும்பு விளைச்சலில் 40 ஆண்டுகளாக தேக்கநிலை

**மதுரை:** ""தமிழகத்தில், கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்பம் இருந்தும், விளைச்சலில் தேக்கநிலையில் உள்ளோம்," என, கோவை வேளாண் பல்கலை நீர் தொழில்நுட்ப மைய இயக்குனர் பாண்டியன் தெரிவித்தார். மதுரை விவசாயக் கல்லூரியில் உழவியல் துறை மற்றும் சென்னை நபார்டு வங்கி சார்பில், கரும்பில் நீடித்த சாகுபடி குறித்த, மாநில விவசாயிகள், அரவை ஆலை அலுவலர்களுக்கான, இரண்டு நாட்கள் கருத்தரங்கு, நேற்று துவங்கியது. துறைத் தலைவர் பாலசுப்ரமணியன் வரவேற்றார். முதல்வர் சின்னுசாமி தலைமை வகித்தார். இயக்குனர் பாண்டியன் பேசியதாவது: தமிழகத்தில், 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்த, ஏக்கருக்கு 40 டன் என்கிற சராசரி அளவு தான், தற்போதும் கரும்பு உற்பத்தியில் பெறப்படுகிறது. மற்ற எல்லாப் பயிர்களுமே விளைச்சல் அதிகரித்துள்ள போது, கரும்பில் மட்டும் பின்தங்கிய நிலையில் உள்ளோம். சொட்டுநீர்ப் பாசனத்தை முறையாக பயன்படுத்தி, பயிருக்கான இடைவெளியை கடைப்பிடித்தால் தான், தனிக்கரும்பின் எடை அதிகரிக்கும். இதுவே விளைச்சலை

அதிகப்படுத்தும் வழி. கரும்பை நட்டபின், நான்கு மாதம் கழித்து, சொட்டுநீர் பாசனம் அமைப்பதால், பயனில்லை. நாற்று உருவாக்கும் போதே, சொட்டுநீர்ப் பாசனத்திற்கு தயாரானால், 90 சதவீத தண்ணீர்த் தேவையை குறைக்கலாம். மொத்த உற்பத்தி முறையில், 25 சதவீதத் தண்ணீர் தேவையை குறைத்து, விளைச்சலையும் அதிகரிக்க முடியும், என்றார்.

**மதுரை மாவட்ட ஒழுங்குமுறை கூடங்கள் நிரம்பின.......! வறட்சி காலத்திலும் தானியங்கள் சேமிப்பு**



**மதுரை:** மதுரை மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் எந்த ஆண்டிலும் இல்லாதவாறு, வறட்சியான இக்காலகட்டத்திலும் நிரம்பி வழிகின்றன. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்யும்போது, அத்தொகையில் ஒரு சதவீதம் அரசுக்கு, மார்க்கெட் கட்டணமாக (செஸ்) செல்கிறது. இதனைக் கொண்டு, விவசாயிகளுக்கு கடனுதவி, விளைபொருட்களை சேமிக்கும் கிட்டங்கி வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதற்கு குவிண்டாலுக்கு நாளொன்றுக்கு 30 காசுகள் வாடகை செலுத்த வேண்டும். இவை, வேளாண் விற்பனை வாரியம் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.இவ்வகையில் செயல்படும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில், மதுரை, உசிலம்பட்டி, திருமங்கலம், வாடிப்பட்டியில், கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் இந்த ஆண்டு கூடுதலான விளைபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. நெல், சோளம், குதிரைவாலி போன்ற தானியங்கள் 6500 மெட்ரிக் டன் அளவிற்கு உள்ளன. கடந்த 2 ஆண்டாக சரியான மழைப்பொழிவு, விளைச்சல் இல்லாத நிலையிலும், விவசாயிகள் இங்கு சேமித்து வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் வைத்திருக்கும் விளைபொருட்களுக்கு ரூ. 2 லட்சம் வரை ஐந்து

சதவீத வட்டியில் கடனுதவியும் பெறலாம். இவ்வகையில், கடந்த ஆண்டைவிட, இந்தாண்டு ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கூடுதலாக கடன் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதே.கடந்த ஆண்டு 155 விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை வைத்துவிட்டு, ரூ. 1.78 கோடி கடனுதவி பெற்றனர். ஆனால் இந்த ஆண்டு 193 விவசாயிகள் ரூ.2.82 கோடி கடனுதவி பெற்றுள்ளனர். மதுரை வேளாண் விற்பனை குழுவின் இச்சாதனையை மாநில இயக்குனர் அனில்மேஷ்ராம் பாராட்டியுள்ளார்.இதன் செயலாளர் தவசுமுத்து கூறியதாவது: கடந்த காலங்களை காட்டிலும் தற்போது ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை விவசாயிகள் அதிகளவு பயன்படுத்துகின்றனர். கூடுதல் கிட்டங்கி வசதி, அதிகாரிகள் விவசாயிகளிடம் ஏற்படுத்திய விழிப்புணர்வே இதற்கு காரணம். விவசாயிகள் தானியங்களை சேமித்து வைப்பதற்கேற்ற ஈரப்பதத்துடன் உலரவைத்து கொண்டு வரலாம். இலவசமாக உலரவைப்பதற்கான களமும் இங்கு உள்ளது.இங்கு சேமித்து வைப்பதால், பொருட்களின் விலை கூடும்போது அதனை விற்கலாம். இதனால் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்பதை தவிர்க்க முடியும். மேலும் ஆறுமாதங்களுக்கு பின், ஏற்படும் மார்க்கெட் நிலவரத்தையும் இங்குள்ள 'டிஸ்பிளே'யில் அறிந்து கொள்ள முடியும்.இதுதவிர பவர் டில்லர், ரோட்டோவேட்டர், கதிரடிக்கும் இயந்திரம் என வேளாண் கருவிகளையும், மிகக்குறைந்த வாடகைக்கு பெறும் வசதியும் உள்ளது, என்றார்.

| ஆண்டு | கடனுதவி |
|---|---|
| 2010-----11 | 95.67 லட்சம் |
| 2011-12 | 1.17 கோடி |
| 2012-13 | 1.78 கோடி |
| 2013-14 | 2.82 கோடி |

**வைகையின் குறுக்கே 4 தடுப்பு அணைகள் ரூ.78 கோடியில் கட்டும் பணி துவக்கம்**

**ராமநாதபுரம்:**மழைநீர் வீணாக கடலுக்கு சென்று கலப்பதை தடுக்க, பொதுப்பணித்துறை சார்பில் ராமநாதபுரம் மாவட்ட வைகை ஆற்றின் குறுக்கே ரூ.78.06 கோடி மதிப்பில், நான்கு இடங்களில் தடுப்பு அணைகள் கட்டும் பணி துவங்கியது. இம்மாவட்டத்தில் நீர்நிலைகள், வரத்துக்கால்வாய் தூர்வாரப்படவில்லை. தூர்ந்து போன இவற்றில் மழைநீர் தேங்குவதில்லை.

பெய்யும் மழை நீரும், வீணாக கடலில் கலக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக, விவசாயம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மழை நீர் வீணாக கடலுக்கு சென்று கலப்பதை தடுக்க, பொதுப்பணித்துறை சார்பில் வைகை ஆற்றின் அணையின் குறுக்கே வலசையில் 19.86 கோடி, குனப்பனேந்தலில் 19.50 கோடி, தெளிச்சாத்தநல்லூரில் 19 கோடி மற்றும் கமுதகுடியில் 19.07 கோடி மதிப்பில், நான்கு தடுப்பு அணைகள் கட்டும் பணி துவங்கி உள்ளது. இப்பணி நிறைவடைந்த பின்னர், மாவட்டத்தில் 92 கண்மாய்களில் நீர் நிரப்பப்பட்டு, 16 ஆயிரத்து 670 எக்டேர் பாசன நிலங்கள் பயன்பெறவுள்ளது.

### மார்க்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம் வரத்து

**சின்னசேலம்** : சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம் வரத்து அதிகளவில் விற்பனைக்கு வந்தது. சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு 24ம் தேதி மக்காசோளம் 900 மூட்டைகள் வந்தது. அதிகபட்ச விலையாக 1223 ரூபாய்க்கு விற்கப்பட்டது. குறைபட்ச விலை 1089 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வரகு 8 மூட்டைகள் வந்தன. அதிகபட்ச விலை 1120 ரூபாய்க்கு விற்கப்பட் டது. சென்ற வாரம் கொள் முதல் 35 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் ஆகும்.

### ஆனைமலையில் கொப்பரை ஏலம்

**ஆனைமலை** : ஆனைமலையில் நடந்த கொப்பரை ஏலத்தில் கூடுதல் விலைக்கு கொப்பரை ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு, காளியாபுரம், சேத்துமடை, வேட்டைக்காரன் புதுார், கோட்டூர்பகுதியில் உள்ள பொங்காளியூர், பொன்னாலம்மன் துறை, அங்கலகுறிச்சி, செம்மேடு, மாரப்பகவுண்டன் புதுார், கிழவன் புதுார். திவான்சா புதுார் பகுதிகளில் இருந்து விவசாயிகள் கொப்பரைகளுடன் வந்தனர். நேற்றுமுன்தினம் நடந்த ஏலத்திற்கு 68 விவசாயிகள் 119 மூட்டை கொப்பரைகளை கொண்டு வந்தனர் . அவற்றை தரம் பிரித்ததில், 75 மூட்டைகள் முதல்தர கொப்பரையாக இருந்தது. அவற்றை ஏலம் விடப்பட்டதில் குறைந்த பட்ச விலையாக கிலோவுக்கு ரூபாய் 81.20 பைசாவும், அதிகபட்ச விலையாக கிலோவுக்கு ரூபாய் 83.05 கிடைத்தது. இதையடுத்து இரண்டாம் தர கொப்பரை 44 மூட்டைகள் ஏலம் விடப்பட்டதில், குறைந்தபட்ச விலையாக 72.50 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக ரூபாய் 80.40க்கும் ஏலம் போனது.

**மதுரை ஆவினை நவீனமயமாக்க.... ரூ.12.38 கோடி ! ரூ.2.69 கோடி மானியத்துடன் நிதி**




**மதுரை**: மதுரை ஆவின் நிறுவனத்தில் பால் குளிரூட்டும் இயந்திரம் உட்பட பழைய இயந்திரங்களை மாற்றி, நவீனமயமாக்கவும், புதிய அடிப்படை கட்டமைப்பை உருவாக்கவும், ரூ.12.38 கோடியில் பணிகள் துவங்கியுள்ளன. மதுரை, தேனி மாவட்டங்களில் விவசாயிகளிடம் பால் கொள்முதல் செய்யும் மதுரை ஆவின் நிறுவனம், தினமும் 1.65 லட்சம் லிட்டர் பாலை பொதுமக்களுக்கு வினியோகம் செய்கிறது. 1967 முதல் துவங்கிய இந்நிறுவனத்தின் இயந்திரங்கள், 45 ஆண்டுகளை கடந்து இயங்கி வருகிறது. தற்போது காலத்திற்கேற்ப இதனை நவீனப்படுத்துவதற்காக ஆவின் நிறுவனம் முன்வந்துள்ளது.ஒருங்கிணைந்த கூட்டுறவு பால்வள திட்டத்தின் கீழ், ரூ. 7 கோடியில் புதிய இயந்திரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இனி, மேம்படுத்தப்பட்ட பால் குளிர்விக்கும், பதப்படுத்தும் இயந்திரங்கள் செயல்படும். இதற்காக துவங்கியுள்ள பணிகள், ஆறு மாதங்களில் முடிவடையும். தவிர, ஆவின் நிறுவனத்தில் ஒரு லட்சம் லிட்டர் என்ற அளவில்தான், பால் பாக்கெட்டுகள் தயாரிப்பது, பால் நிரப்புவது, பால் டின்கள் கழுவுதல், பதப்படுத்துதல், ஸ்டோர் செய்தல் ஆகியவற்றிற்கான திறன் உள்ளது. இதனை 2 லட்சம் லிட்டர் அளவிற்கு மாற்ற, தேசிய உணவுப்பதப்படுத்தும் திட்டம் சார்பில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கலெக்டர் சுப்ரமணியன் தலைமையில் ஆலோசனை நடத்திய குழு, சென்னை வேளாண்துறை விற்பனை வாரியத்திற்கு இப்பணிகளை பரிந்துரைத்தது. அத்துறை அதிகாரிகளின் பரிந்துரைப்படி, மத்திய அரசு ரூ. 2.69 கோடி மானியத்துடன், மொத்தம் ரூ.5.38 கோடி செலவிட உள்ளது. இதற்காக, சென்னை வேளாண் விற்பனை வாரிய இணை இயக்குனர் கக்கன், மதுரை துணை இயக்குனர் தவசிமுத்து ஆகியோர் நேற்று, ஆவின் நிறுவனத்தை

பார்வையிட்டனர். நவீன குளிரூட்டப்பட்ட சேமிப்பு மைய பணிகள், ஒன்றரை ஆண்டுகளில் முடிந்து பயன்பாட்டுக்கு வரும். அதன்பின் அதிகப்படியான பால் கொள்முதல் செய்யும்போது, அவற்றை பவுடராக, வெண்ணையாக ஓராண்டு வரை கெட்டுப்போகாமல் சேமித்து வைக்கலாம். பொதுமேலாளர் கிறிஸ்டி, உதவிப்பொதுமேலாளர் சுப்ரமணியன் கூறுகையில், "உற்பத்தி இடத்தில் இருந்து நுகர்வோர் வரை, பாலை தரம் குறையாமல் வினியோகிக்க வேண்டும். இதில் எந்த இடத்திலும், பாலின் தரம் குறையாமல் நுகர்வோருக்கு கொண்டு சேர்ப்போம். ஏப்ரல் மாதத்திற்கு பின் பால் உற்பத்தி அதிகரிக்கும். அதுபோன்ற நேரங்களில், இந்த குளிர்பதன மையத்தில் பாலை தரம்குறையாமல் சேமித்து வைக்க முடியும்," என்றனர்.

## கோடை வெயில் துவக்கம்: இளநீர் விற்பனை அமோகம்

**தர்மபுரி**: மாவட்டத்தில், கோடை வெயில் கொளுத்த துவங்கியதால், இளநீர் விற்பனை களைகட்டி உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் சில தினங்களாக அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் பனிக்காற்று வீசி வந்தாலும், பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் நாளுக்கு, நாள் அதிகரித்து வருகிறது. கோடை காலம் துவங்கும் முன், தர்மபுரி மாவட்டத்தில், சிலதினங்களாக பகல் நேரங்களில் வாட்டி வரும் வெயிலில் இருந்து உடல் நலத்தை பாதுகாத்து கொள்ள, கோடைக்கு இதம் தரும் வகையில், இயற்கை பானமான இளநீர் கடைகளை பொதுமக்கள் நாடி வருவதால், இளநீர் விற்பனை களை கட்டி உள்ளது.

இதுகுறித்து, இளநீர் வியாபாரி கிருஷ்ணராஜ் கூறியதாவது:

தர்மபுரியில், கோடை காலங்களில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் அதிகளவில் பாட்டில்களில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களை, கடந்த காலங்களில் அதிகளவு பருகி வந்தனர். அவற்றில், பூச்சி மருந்து கலப்பதாக எழுந்த புகாரால், இயற்கை பானமான இளநீரை இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆர்வமாக வாங்கி பருகி வருகின்றனர். குறிப்பாக, சில தினங்களாக, தர்மபுரியில் வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளதால், இளநீர் விற்பனை சூடு பிடித்துள்ளது. பாலக்கோடு, காரிமங்கலம், மாரண்டஹள்ளி ஆகிய பகுதிகளில் இளநீரை மொத்தமாக வாங்கி வந்து, தர்மபுரி பகுதியில், ஒரு இளநீர், 15 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். போதிய மழையில்லாததால், இளநீர் கொள்முதல் விலை, கடந்தாண்டை விட தற்போது உயர்ந்துள்ளது. இதனால் எங்களுக்கு குறைந்தளவு லாபம் மட்டும்

கிடைக்கிறது. மேலும், கோடை காலங்களில் இளநீர் விற்பனை அதிகரிக்கும் போது, எங்களுக்கு வருமானம் சற்று அதிகரிக்கும், என்றார்.

## காடு வளர்ப்பு திட்டத்தை ஊக்குவிக்க விவசாயிகள் முன்வர வேண்டும்

**பந்தலூர் :** "காடு வளர்ப்பு திட்டத்தை ஊக்குவிக்க விவசாயிகள் முன் வர வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டது.

பந்தலூர் அருகே உப்பட்டியில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில், விவசாயிகளுக்கான பண்ணை கருவிகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்த ஒருவார கால பயிற்சி முகாம் நடந்தது. இதன் இறுதிநாளில், பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. விவசாயி தேவதாஸ் வரவேற்றார். அத்திக்குன்னு குறுநீர் பிடிப்பு சங்க தலைவர் மூர்த்தி பேசுகையில்,""அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டு வரும் நிலையில், இதுபோன்ற பயிற்சி முகாம்களில் பங்கேற்பதன் மூலம் தெளிவு பெற இயலும். தடுப்பணைகள் கட்டுதல், நீரோடைகளை தூர்வாரி ஆக்கிரமிப்பு அகற்றுதல், பண்ணை மற்றும் விவசாய இயந்திரங்களை மானிய விலையில் தருதல் போன்ற திட்டங்கள் பயனுள்ளதாக உள்ளது,"என்றார். உதவி மண் வளபாதுகாப்பு அலுவலர் சுந்தரலிங்கம் பேசுகையில், ""கடந்த ஒரு வார காலமாக பெற்ற பயிற்சியில் தெரிந்த நல்ல கருத்துக்களை பயன்படுத்தி கொள்ள விவசாயிகள் முன்வரவேண்டும். அதேபோல, விவசாயத்தை மேம்படுத்த மத்திய-மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், அதனை முறையாக உண்மையான பயனாளிகள் பெற்று பயன்பெற வேண்டும். தற்போது துறையின் மூலம் தடுப்பணைகள், நீரோடைகளின் ஓரப்பகுதிகளில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ள நிலையில், அதனை பாதுகாத்திடவும், காடு வளர்ப்பு திட்டத்தை ஊக்குவிக்கவும் விவசாயிகள் முன்வரவேண்டும்," என்றார்.

பயிற்சி பெற்றவர்கள் தங்களின் அனுபவத்தை பகிர்ந்துக்கொண்டனர். தொடர்ந்து உப்பட்டி அரசு நடுநிலைப்பள்ளி ஆசிரியர் ரமேஷ் பயிற்சிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். ஆசிரியர்கள் தனலட்சுமி, ஹேமலதா, லதா மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். நுகர்வோர் பாதுகாப்பு மைய தலைவர் சிவசுப்ரமணி நன்றி கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் கோமாரி நோயை கட்டுப்படுத்த சிறப்பு கிராம சபை கூட்டங்கள்

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நேற்று கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயினை கட்டுப்படுத்துவது குறித்து சிறப்பு முகாம் ஏற்பாடுகள் செய்வது தொடர்பாக சிறப்பு கிராம சபை கூட்டங்கள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது. மூலசமுத்திரம் கிராம சபை கூட்டம் தலைவர் செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் ஷேக்ஜவாத் உள்ளிட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். வெள்ளையூர் கிராமத்தின் கிராமசபை கூட்டம் தலைவர் அரபியாபேகம் தலைமையிலும், பிடாக கிராமசபை கூட்டம் தலை வர் ஜெயாஜெகன் தலைமையிலும், வீரமங்கலம் கிராமசபை கூட்டம் தலைவர் தண்டாயுதபாணி தலைமையிலும், எம்.குண்ணத்தூர் கிராமசபை கூட்டம் தலைவர் ராஜேஸ்வரி ராஜா தலைமையிலும் நடைபெற்றது. இக்கூட்டங்களில் கிராமப்புறங்களில் உள்ள கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயினை கட்டுப்படுத்த மார்ச் 1ம் தேதி முதல் சிறப்பு முகாம் அமைக்கப்பட்டு கால்நடைகளுக்கு தடுப்பு மருந்துகள் போடுவதற்கான ஏற்பாடுகள் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. இதேபோல் குஞ்சரம், பெரியகுறுக்கை, புகைப்பட்டி, கூவாடு, எறையூர், எல்லைக்கிராமம், மலையனூர் உள்ளிட்ட அனைத்து கிராமங்களிலும் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலைச்செல்வி,ஞானசேகரன் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு ஆய்வு செய்தனர்.

## பயிர் சாகுபடியில் ஒருங்கிணைந்த பண்ணை உத்திகள்

உடுமலை, : உடுமலை தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் இளங்கோ கூறியதாவது:

தோட்டக்கலை பயிர் சாகுபடியுடன் ஒருங்கிணைந்த பண்ணை உத்தி தான் லாபம் தரும். இதற்கு உபதொழில்களாக மண்புழு வளர்ப்பு, தேனீ, காளான் வளர்ப்பு, ஆடு, மாடு, முயல், பன்றி, பட்டுப்புழு, வாத்து, கோழி, மீன் வளர்ப்பு, வேளாண் காடுகள், சாண எரிவாயு கலன், சூரிய ஒளி ஆதாரங்கள் பயன்பாடு மூலம் காய

வைத்து விற்க உகந்த வற்றல் வகை, பழச்சாறு, ஜாம். ஜெல்லி தயாரிப்பு, பண்ணை குட்டைஅமைத்தல் தீவன பயிர் சாகுபடி செய்தல் ஆகியவை ஒருங்கிணைந்த பண்ணை உத்திகளை விவசாயிகள் பின்பற்றலாம். இயற்கை வேளாண் உத்தியும் இத்தகைய உத்திகளால் எளிதில் சாத்தியமாகும் அங்கக சான்று மூலம் உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர் சான்று பெறலாம். இதன் மூலம் இயற்கை அங்காடிகளில் தனது விளைபொருட்களை விற்க வழி உள்ளது. ஒருங்கிணைந்த பண்ணை திட்டம் பராம்பரிய முறையின் நவீன உத்திகளையும் வேளாண் தோட்டக்கலை சார்பு தொழில்களை ஊக்குவிக்கும் உத்தியாகும். ஒவ்வொரு விவசாயியும் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலத்தில் ஒருங்கிணைந்த முறைகள் கையாள தற்போது அவசியமாகும். இத்தகைய உத்திகளால் தான் அதிக லாபம் பெற முடியும். ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு, நிலையான வருமானம், நீடித்த வேளாண் பண்ணை கழிவுகள் முறையாக பயன்படுத்துதல், தரமான விளைபொருள் உற்பத்தி மூலம் வாழ்வாரத்தை மேம்படுத்தி கொள்ளலாம் என்றார்.

## கோமாரி தடுப்பூசி முகாம் 1ல் துவக்கம்

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடை பராமரிப்புத் துறையினரால் 6வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசிப் பணி வரும் மார்ச் 1ம் தேதி துவங்குகிறது.
இப்பணி தொடர்ந்து 21 நாட்கள் காலை 6 மணி முதல் 9 மணி வரையும் மற்றும் மதியம் 3 மணி முதல் 5 மணி முடிய மேற்கொள்ளப்பட உள்ளது. தடுப்பூசிப் பணிக்குழு கிராமங்களுக்கு வருகைத் தரும் நாள் விபரம் அனைத்து ஊராட்சித் தலைவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியினை தவறாது போட்டு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலை கலெக்டர் மனோ கரன் தெரிவித்துள்ளார்.

## மானாவாரியில் பருத்தி பயிரிட ஆலோசனை

தேனி, : மானாவாரியில் பருத்தி பயிர் செய்து கூடுதல் மகசூல் பெறுவது குறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.
மானாவாரியில் பருத்தி பயிரிட எல்ஆர்ஏ-5,166, சுமங்கலா கே-11, எஸ்விபிஆர்-2, கேசி-2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். 45க்கு 15 செமீ இடைவெளியில் பாத்தி அமைத்து ஹெக்டேருக்கு 15 கிலோ என்ற அளவில் விதைகளை விதைக்க வேண்டும். பஞ்சு நீக்கிய விதையுடன் 3 கிராம் பாலிகோட், இமிடர்குளோபரிட் 7

கிராம், சூடா மோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 10 கிராம், அசோபாஸ் 40 கிராம் கலந்து விதைக்க வேண்டும். ஹெக்டேருக்கு சிங்க் சல்பேட் 50 கிலோ அடி உரமாக இட்டால், வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம். விளைச்சல் அதிகரிக்கும். பயி ரின் வயது 150 நாட்களுக் குள் இருக்கும் பேது, 60 கிலோ தழைச்சத்து இட வேண்டும். 150 நாட்களுக்கு மேல் ஆகும் போது தழைச்சத்து 80 கிலோவிற்கு மேல் இட வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு தழைச்சத்து 120 கிலோ இட வேண்டும். களை முளைப்பதற்கு முன் ப்ளூகுளோரலின் 2.2 லிட்டர் அல்லது பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளிக்க வேண்டும். உயிர் உரமாக 2 ஆயிரம் கிராம் அசோஸ்பைரில்லத்துடன் 2 ஆயிரம் கிராம் பாஸ்போ பாக்டீரியா இட வேண்டும். ரசாயன உரங்களாக இருந்தால் மண் பரிசோதனை செய்து மண் வள அட்டை பெற்ற பின்பு உரமிட வேண்டும். கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரை தொடர்பு கொள்ளலாம் என்று வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மேகமலை வனப்பகுதியில் காட்டு யானைகளின் பசியை போக்க தீவன தோட்டம் அமைக்க திட்டம் 2 ஆயிரம் மூங்கில் நாற்றுகள் தயார்

வருசநாடு, : மேக மலை வனப்பகுதியில் காட்டு யானைகளின் பசியை போக்க தீவன தோட்டம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 2 ஆயிரம் மூங்கில் நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன.
தேசிய காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் நடப் பாண்டில் கடமலை- மயிலை ஒன்றியம் மேகமலை வனச்சரக பகுதிகளில் தேக்கு, தோதகத்தி, வேம்பு, ஆலம், புங்கம் போன்ற மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மரக்கன்றுகள் வளர்க்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் காட்டு யானைகளுக்கு தீவனம் அளிக் கும் வகையில், மூங்கில் நாற்றுகளும் வளர்க்கப்பட்டு வரு கிறது. யானைகளுக்கு தீவன தோட் டம் அமைக்க வனப்பகுதி யில் சுமார் 2 ஆயி ரம் மூங் கில் நாற்று களும், தேசிய காடு வளர் ப்பு திட்டத் தின் கீழ் 16 ஆயிரம் மரக்கன்றுகளும் வளர்க்கப்பட்டு வருவதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். தற்போது கடமலை-மயிலை ஒன்றியத்தில் மழையளவு குறைந்து, நிலத்தடி நீர் மட்டம் சரிந்துள்ளதால், மேகமலை வனச்சரக அலுவலகத்தில் இருந்து சுமார் ஒரு கிமீ தூரத்தில் உள்ள தனியார் தோட்டத்தில் மரக்கன்றுகளை வைத்து வனத்துறை அதிகாரிகள் பராமரித்து வருகின்றனர். இதேபோல கண்டமனூர் வனச்சரகத்திற்கு உட்பட்ட வனப்பகுதிகளில் நடுவதற்கான மரக்கன்றுகள் வளர்க்கும் பணி தீவிரமாக நடைபெற்று வரு கிறது.

50 ஏக்கர் பரப்பளவில் நடுவதற்காக 10ஆயி ரம் நாற்றுகள் வளர்க்கப் பட்டு வருகிறது. நாற்றுகள் நன்கு வளர்ந்த பின்பு மரக்கன்றுகள் நடும் பணி துவங் கும் என மேகமலை வனச்சரகர் செசில் ஹில்பர்ட் தெரிவித்தார்.

### 450 ஊராட்சிகளில் கிராமசபை கூட்டத்தில் கோமாரி நோய் விழிப்புணர்வு

விருதுநகர், : மாவட்டத்தின் 450 கிராம ஊராட்சிகளிலும் பிப்.25(நாளை) காலை 11 மணிக்கு சிறப்பு கிராம சபை கூட்டம் நடை பெற உள்ளது. இதில் கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு கோ மாரி நோய் தடுப்பூசி போடுவதன் அவசியம் குறித்து விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

கூட்டத்தில் மார்ச்1 முதல் 21 வரை கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவகுழு மூலம் நடத்தப்படும்  தடுப்பூசி பணி முகாம்களில் தவறாது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு பயனடையுமாறு மாவட்ட கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

### வறட்சியால் 7லட்சம் தென்னை மரங்கள் பாதிப்பு அரசுக்கு அறிக்கை அனுப்பி வைப்பு

விருதுநகர், : விருதுநகர் மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக 4ஆயிர த்து55 ஹெக்டேரில் 7 லட் சம் தென்னை மரங்கள் பாதிப்படைந்துள்ளன.

விருதுநகர் மாவட்டத் தில் விவசாயம் பிரதான தொழிலாக இருந்த போது ஆண்டு தோறும் 1லட்ச த்து35 ஆயிரம் ஹெக்டேரில் விவசாயம் நடைபெற்றுள்ளது. மழையின்மை, விவசாய தொழிலாளர் பற்றாக்குறை, ரியல் எஸ்டேட் தொழில் உள்ளிட்ட காரணங்களால் கடந்த 5 ஆண்டுகளாக விவசாயம் குறைந்துள்ளது. மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளாக நெல் 31 ஆயிரம் ஹெக்டேர், சிறுதானியம் 43ஆயிரம் ஹெக் டேர், பயறு வகைகள் 18ஆயிரத்து300 ஹெக்டேர், பருத்தி 10ஆயிரத்து 500ஹெக்டேர், கரும்பு 4ஆயிரம் ஹெக்டேர், எண் ணெய் வித்துக்கள் 7ஆயிர த்து840 ஹெக்டேர் ஆக மொத்தம் 1லட்சத்து 14ஆயி ரத்து 640 ஹெக்டேரில் விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த 2012ம் ஆண்டில் விவசாயம் மாவட்டத்தில் 76ஆயிரம் ஹெக்டேரில் நடைபெற்றது. 2012ல் பருவமழை சரசாரியை விட 247 மி.மீ குறைவாக பெய்ததால் மாவட்டத்தில் வறட்சி பாதிப்பு அதிகம் இருந்தது. வத்திராயிருப்பு, மாம்சாபுரம், மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரம், ராஜபாளையம், திருவில்லிபுத்தூர் பகுதிகளில்9 ஆயிரம் ஹெக்டேரில்

தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஹெக்டேரிலும் 175 முதல் 200 தென்னை மரங்கள் உள் ளன. வறட்சியின் பாதிப் பால் பல ஆயிரம் தென்னை மரங்கள் காய்ந்து தொங் கின. கடந்த 2012ம் ஆண்டு தமிழக அரசு வழங்கிய வறட்சி பாதிப்பிற்கு வழங்கப்பட்ட நஷ்டஈட்டில் தென்னை மரங்களின் பாதிப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகள் மரம் ஒன்றிற்கு ரூ.2ஆயிரம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரிக்கைகள், போராட்டங்கள் நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் தென்னை பாதிப்பை கணக்கெடுக்க வேளாண்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. அதிகாரிகள் எடுத்த கணக்கெடுப்பின் படி 4ஆயிரத்து55 ஹெக் டேரில் இருந்த 7 லட்சத்திற்கும் அதிகமான தென் னை மரங்கள் காய்ந்து போய் இருப்பதும், உற்பத்தி பாதிப்பிற்கு உள்ளாகி இருப் பதும் தெரிய வந்துள்ளது.

விவசாயிகள் கூட்டத் தில் கலெக்டர் ஹரிஹரன் கூறுகையில், தென்னை பாதிப்பு விவரங்கள் கணக்கெடுக்கப்பட்டு அரசுக்கு வேளாண்துறையினர் அனுப்பி இருப்பதாக தெரிவித்தார்.

## தோட்டக்கலை பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளிக்கும் பணியில் பெண்கள் தீவிரம்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில், பல் வேறு சாகுபடிகள் செய்யப்படுகிறது. கோடை காலத்தில் அரும்பு, முல்லை, கத்தரி, வெண்டை என தோட்டக்கலை துறை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் ஆண்கள், பெண்கள் என குடும்பத்தில் உள்ள அனைவருமே விவசாய பணிகளில் தீவிரமாக ஈடுபடுகின்றனர்.

ஆண் தொழிலாளர் கள் மற்றும் குடும்ப தலைவர்கள் கூலி வேலைக்கு அல்லது வேறு பணிக்கு செல்லும் காலங்களில் வீட்டில் உள்ள பெண்கள் தீவிரமாக விவ சாய பணி களில் ஈடுபடுகின்றனர். வெங்கடேசபுரம் கிராமத்தில் தற் போது அரும்பு சாகுபடி தீவிரமடைந்துள்ளது. அரும்பு பயிரில் சிவப்பு காய் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் பூக்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதை கருத்தில் கொண்டு விவசாயிகள் பூச்சி கொல்லி மருந்துகள் தெளிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வீட்டில் உள்ள ஆண்கள் வேறு பணிக்கு செல்வதால் காலை நேரத்திலேயே பூச்சிகொல்லி மருந்து தெளிக்கும் பணியில் பெண்கள் ஈடுபடு கின்றனர்.

## பருத்தியில் களைகளை கட்டுப்படுத்தும் பி.டி. ரக தொழில்நுட்பத்துக்கு பரிந்துரை விவசாயிகள் கோரிக்கை

பெரம்பலூர்,: பருத்திக்குப் பாதிப்பின்றி, களைகளை கட்டுப்படுத்தும் பி.டி. ரக தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஏதுவாக அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக பெரம்பலூர் தொகுதி எம்எல்ஏ தமிழ்ச்செல்வனை பருத்தி விவசாயிகள் நேரில் சந்தித்து தங்களது கோரிக்கையை மனுவாக அளித்து அதற்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தினர். அம் மனுவில் விவசாயிகள் கூறியிருப்பதாவது:பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டை ஒன்றிய பகுதிகளில் பருத்தி விவசாயம் செய்து வருகிறோம். வேளாண் தொழிலில் நாங்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டு வருகிறோம்.

அதன் படி, பருத்தி விவசாயத்தில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பாக அதாவது 2002ம் ஆண்டுக்கு முன்பாக சாதாரண ரக பருத்திகளை பயிர் செய்து வந்தோம். சாதாரண ரக பருத்தியில் அமெரிக்கன் காய்ப் புழு, இளஞ்சிவப்பு காய்ப் புழு, புள்ளிகாய்ப் புழு, புரூட்டோனியா போன்ற காய்ப் புழுக்களின் தாக்குதல் மிக அதிகமாக இருந்தன.  இவற்றைக் கட்டுப்படுத்திட மிக அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தினோம்.ஆனால், இதன் மூலம் எங்களுக்கு அதிக அளவில் பொருளாதாரச் செலவும், மன உளைச்சலும் தான் ஏற்பட்டது. இத்தனை சிரமங்களை அனுபவித்தும் எங்களால் 5, 6 குவிண்டால் மகசூலுக்கு மேலாக எடுக்க முடியவில்லை. இதன் மூலம் மிகுந்த நஷ்டத்தை அடைந்து பருத்தி விவசாயத்தையே கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டோம்.

பின்னர், கடந்த 2002ல் அறிமுகப்படுத்தப் பட்ட பி.டி. ரக பருத்தியை கடந்த 12 ஆண்டுகளாகப் பயிரிட்டு வருகிறோம். இதன் மூலம் காய்ப் புழுக்களின் தாக்குதல் திறம்பட கட்டுப்படுத்தப்பட்டு தரமான வெந்நிற பருத்தியைப் பெற்று வருகிறோம். மேலும் இதில் காய்ப் புழுக்கள் ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்தப்படுவதால் அதிகப்படியாக மானா வாரியில் 10 குவிண்டாலும், இறவையில் 12 குவிண்டாலும் பெற முடிகிறது. இதன் காரணமாக எங்கள் பகுதியில் பருத்தி விவசாயம் மறுமலர்ச்சி பெற்று அதிக லாபத்துடன் நடைபெற்று வருகிறது. தற்போது பருத்தி விவசாயத்தில் நாங்கள் சந்தித்துவரும் அடுத்த மிகப்பெரிய பிரச்னை களை நிர்வாகமாகும். தற்போது பருத்தியில் 2 முறை களையெடுக்க ரூ. 7ஆயிரம் முதல் ரூ 8ஆயிரம் வரை செலவாகிறது. மேலும், களை எடுப்பதற்கான விவசாய கூலி ஆட்கள் தட்டுப்பாடு, களை களால் பிரச்னை போன்றவற்றால் பருத்தியில் மகசூல் குறைந்து சிரமப்பட்டு வருகிறோம். இது எங்களது வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கிறது.எனவே, பி.டி. ரக தொழில்நுட்பத்தின் மூலம் காய்ப் புழுக்களை

கட்டுப்படுத்தியது போல பி.டி. ரக பருத்தியில் களை களைக் கட்டுப்படுத்திட புதிய தொழில் நுட்பம் ஆராய்ச்சியில் உள்ளதாக, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், அலுவலர்கள் மூலமாக அறிந் தோம். இத் தொழில்நுட்பம் கொண்ட பருத்தி வயலில் குறிப்பிட் களைக் கொல்லியை தெளிக்கும்போது பருத்திச்செடிக்கு எவ்வித பாதிப்பும் இன்றி, அனைத்துவிதமான களை யும் திறம்பட அழிக்கக்கூடியது என்பதை அறிந்தோம்.தமிழகத்தில் ஆண்டுதோறும் 5 லட்சம் ஏக்கரில் பயிரிடப்படும் பருத்தியில் 90% பிடி பருத்தி சாகுபடியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் 3 லட்சம் விவசாயிகளும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

மேலும், இத் தொழில்நுட்பம் ஆந்திரா, கர்நாடகா, மகாராஸ்டிரா, பஞ்சாப், குஜராத் ஆகிய மாநிங்களில் பரிசோதிக்கப்பட்டு, விவசாயிகளின் பரிசோதனைக்கு அந்தந்த மாநில அரசுகள் அனுமதி அளித்துள்ளன.எனவே, அதே போல், தமிழகத்திலும் இத் தொழில்நுட்பத்தை பயன்படுத்திட அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும் என்றனர் அவர்கள்.

## மானிய விலையில் 50 விவசாயிகளுக்கு புல் நறுக்கும் கருவி

பெரம்பலூர்,: தீவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாயிகள் 50 பேருக்கு மானிய விலையில் ரூ. 8.7 லட்சம் மதிப்பிலான புல்நறுக்கும் கருவிகளை கலெக்டர் தரேஸ் அஹமது வழங்கினார்.

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் பெரம்பலூர் புதிய பஸ் நிலையம் எதிரேயுள்ள கால்நடைமருந்தகத்தில் இதற்கான விழா நடைபெற்றது. ரூ.17,400 விலை உள்ள இந்த கருவியானது விவசாயிக்கு ரூ.13,050 வீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. விழாவில் பங்கேற்ற 50 விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய ரூ.8.7 லட்சம் மதிப்பிலான புல்நறுக்கும் கருவிகளை கலெக்டர் தரேஸ் அஹமது வழங்கினார்.

விழாவில் பெரம்பலூர் நகராட்சி தலைவர் ரமேஷ், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் மனோகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

**வேளாண் உற்பத்தி குறித்து துல்லிய மதிப்பீடுகள் தேவை தானிய வர்த்தக சங்கம் வலியுறுத்தல்**



மும்பை,

வேளாண் விளைபொருள்கள் உற்பத்தி குறித்த அரசு மதிப்பீடுகளுக்கும், வர்த்தக வட்டாரங்களின் மதிப்பீடுகளுக்கும் இடையே பெரும் வித்தியாசங்கள் காணப்படுகிறது. இதனை தவிர்க்க வேண்டும் என்றும், கரீஃப் மற்றும் ரபி பருவ விளைச்சல் குறித்து துல்லியமாக மதிப்பீடுகளை வெளியிடும் வகையில் ஆய்வு அமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்றும் இந்திய பருப்பு, தானிய வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

<u>பருப்பு உற்பத்தி</u>

நடப்பு 2013–14 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) 1.98 கோடி டன் பருப்பு உற்பத்தியாகும் என மத்திய அரசு மதிப்பீடு செய்துள்ளது. இதில் 98 லட்சம் டன் கொண்டைக்கடலையும் அடங்கும். ஆனால் வர்த்தக வட்டாரங்கள் 65 லட்சம் டன் அளவிற்கே கொண்டைக்கடலை உற்பத்தியாகும் என்று மதிப்பீடு செய்துள்ளதாக பருப்பு, தானிய சங்கத்தின் தலைவர் பிரவீண் டாங்கிரி தெரிவித்தார். நாட்டில் உற்பத்தியாகும் பருப்பு வகைகளில் கொண்டைக்கடலையின் பங்கு 40 சதவீதமாக உள்ளது. இந்நிலையில் அரசு மற்றும் வர்த்தக துறையின் மதிப்பீடுகளுக்கு இடையில் 30 லட்சம் டன் அளவிற்கு வேறுபாடு உள்ளது. இதில் எது

உண்மையான கணிப்பு என்பதில் குழப்பம் ஏற்படுகிறது. பருப்பு இறக்குமதி குறித்து கூறிய டாங்கிரி, ''நடப்பு நிதி ஆண்டில் 30 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்படும். சென்ற நிதி ஆண்டில் 40 லட்சம் டன் பருப்பு வகைகள் இறக்குமதியாகின'' என்று தெரிவித்தார். பருப்பு ஏற்றுமதி மீதான தடையை மத்திய அரசு நீக்க வேண்டும் என ஏற்றுமதியாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு தடை தொடர்ந்து நீடிக்கிறது. 2001–ஆம் ஆண்டில் மத்திய அரசு பருப்பு ஏற்றுமதிக்கு அனுமதி அளித்தது. ஆனால் 2007–ஆம் ஆண்டில், காபுலி வகை கொண்டைக்கடலை தவிர பிற பருப்பு வகைகள் ஏற்றுமதிக்கு தடை விதித்தது.

<u>விவசாயிகள் நலன்</u>

''விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு பருப்பு ஏற்றுமதி மீதான தடையை நீக்குவதுடன், பொது விநியோக முறையில் பருப்பு வகைகளை விற்பனை செய்ய வேண்டும். மேலும் ஓராண்டு காலத்திற்கு குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு கீழே பருப்பு வகைகளின் விலை குறைந்தால் விவசாயிகள் பருப்பு சாகுபடியை தவிர்க்க தொடங்கி விடுவார்கள்'' என பருப்பு, தானிய வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

**குட்டைபோல் காட்சி அளிக்கும் மேட்டூர் அணை**



சேலம் மாவட்டம் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 49 அடியாக குறைந்தது. இதனால் மேட்டூர் அணை குட்டை போல் காட்சியளிப்பதை படத்தில் காணலாம்.

காணொலிக்காட்சி மூலம் மத்தாளப்பள்ளம் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு



மத்தாளப்பள்ளம் அணையில் பாசனத்திற்காக தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்,

ஏரியூர்,

700 ஏக்கர் விவசாய நிலங் கள் பயன்பெற மத்தாளப் பள்ளம் அணையில் இருந்து முதல்-அமைச்சர் காணொலிக்காட்சி மூலம் பாசனத்திற்கு தண் ணீர் திறந்து வைத்துள்ளார். இதையொட்டி கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண் டும் என்று 25 கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>தண்ணீர் திறப்பு</u>

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் அருகே புது நாகமரை கிராமத்தில் மத்தாளப்பள்ளம் அணை கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.14 கோடியே 15 லட்சம் மதிப்பில் 60 கனஅடி கொள்ளளவு தண்ணீர் தேக்கி வைக்கும் அளவுக்கு அணை கட்டப்பட்டது. இந்த அணை மூலம் ராமகொண்டஅள்ளி, சுஞ்சல்நத்தம், நாகமரை ஊராட்சிகளுக்குட்பட்ட சுமார் 25-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாசன வசதி பெறும் வகையில் பொதுப் பணித்துறை மூலம் கட்டப்பட் டது. இந்த அணையின் மூலம் சுமார் 700 ஏக்கருக்கும் மேற் பட்ட விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். மத்தாளப்பள்ளம் அணை தண்ணீரை பயன்படுத்தி ஒரு போக நெல் சாகுபடி செய்ய லாம். தற்போது இந்த அணை யில் 47 கனஅடி தண்ணீர் உள்ளது. இதனால் மத்தாளப்பள்ளம் அணையில் இருந்து பாசனத் திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். பொதுமக்களின் கோரிக் கையை ஏற்று கடந்த 14-ந்தேதி தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா மத்தாளப்பள்ளம் அணையில் இருந்து காணொலி காட்சி மூலம் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட்டார். அப்போது பொதுப் பணித்துறை அலுவலர்கள்,

விவசாயிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அணையில் சிறப்பு பூஜை செய்து மகிழ்ச் சியை தெரிவித்தனர்.

<u>பயன்பாடு இல்லை</u>

மத்தாளப்பள்ளம் அணை யில் இருந்து பாசனத்திற்கு கால்வாய் மூலம் திறந்து விடப்பட்ட தண்ணீர் செல்ல முடியாமல் ஆங்காங்கே அப்ப டியே தேங்கி நின்று வீணானது. அதனை தொடர்ந்து அதிகாரி கள் சென்று பார்த்த போது கால்வாயையொட்டி உள்ள குடியிருக்கும் விவசாயிகள், பொதுமக்கள் கால்வாயில் மண் கொட்டி வீடுகளுக்கு செல்ல பாதை அமைத்து இருப்பது தெரியவந்தது. அணை தண்ணீர் வீணாகி போனதால் அணையில் இருந்து கால்வாய்க்கு தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து கால் வாயை மண் கொட்டி ஆக்கிர மிப்பு செய்த பொதுமக்களிடம் கால்வாயை தூர்வார வலி யுறுத்தி வருகின்றனர். இருப் பினும் அவர்கள் அதனை கொண்டு கொள்ளாமல் விட்டு விட்டனர். இதனால் பொதுப்பணித்துறை மூலம் கால்வாய்களை தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. இந்த பணிகள் ஒரு வாரத்தில் முடிவடைந்து விடும். அதன்பிறகு மத்தாளப் பள்ளம் அணையில் இருந்து கால்வாய் மூலம் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித் தனர். முதல்-அமைச்சர் காணொலி காட்சி மூலம் மத்தாளப்பள்ளம் அணையில் இருந்து பாசனத்திற்கு தண் ணீர் திறந்து விட்டும் பல்வேறு காரணங்களை கூறி அதிகாரி கள் இதனை நடைமுறைப் படுத்த வில்லை என்று தெரி வித்தனர். எனவே மத்தாப்பள் ளம் அணை கால்வாய் பகுதி களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி உடனே பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**அரிசி அலைகளுக்கு அனுப்பபடும் நெல்மூட்டைகள்**



நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் பேரளம் ரெயில்வே நிலையத்தில் இருந்து வெளி மாவட்ட அரிசி ஆலைகளுக்கு அனுப்பும் பணி நடைபெற்றுபோது எடுத்தபடம்.

## திருத்துறைப்பூண்டி அருகே உலர் தீவன விற்பனை மையம் கலெக்டர் தொடங்கி வைத்தார்



திருத்துறைப்பூண்டி வேப்பஞ்சேரி உலர் தீவன கிடங்கில் வைக்கோல் விற்பனையை கலெக்டர் நடராசன் தொடங்கி வைத்தபோது எடுத்தபடம்.

திருத்துறைப்பூண்டி அருகே வேப்பஞ்சேரியில் உலர் தீவன விற்பனை மையத்தை கலெக் டர் தொடங்கி வைத்தார்.

<u>உலர் தீவன விற்பனை மையம்</u>

திருவாரூர் மாவட்டம் திருத் துறைப்பூண்டி அருகே உள்ள உலர் தீவன விற்பனை மையம் புதிதாக அமைக்கப்பட்டுள் ளது. இதன் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலெக்டர் நட ராசன் கலந்து கொண்டு, உலர் தீவன விற் ப னை மையத்தின் வைக்கோல் விற்பனையை தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் கூறிய தாவது:–

திருவாரூர் மாவட்டத்தில் வறட்சி நிவராண திட்டத்தின் கீழ் உலர் தீவன கிடங்கு, நீடாமங்கலம், நன்னிலம் ஆகிய இடங்களில் விரைவில் ஏற்படுத்தப்படும்.

<u>தீவன அட்டை</u>

உலர் தீவன கிடங்குகளில் அரசு விதைப் பண்ணைகளில் இருந்து வாங்கப்படும் வைக் கோல், கால்நடை வளர்ப் பவருக்கு கிலோ ரூ. 2 என்ற விலையில் விற்பனை செய்யப் படுகின்றன. ஒரு குடும்ப அட்டைக்கு 5 மாடுகளுக்கு 21 கிலோ வீதம் அதிக பட்சமாக 105 கிலோ வைக்கோல் வழங் கப்படும். இந்த திட்டத்தில் பயன் பெறும் பயனாளி சிறு மற்றும் குறு விவசாயியாக இருக்க வேண்டும். இந்த திட்டத்தில் பயன் பெறுவதற்கு தீவன அட்டை பெறவேண்டும். தீவன அட்டையை தீவன கிடங்கு பொறுப்பு கால்நடை உதவி மருத்துவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தை பயன்படுத்தி அனைத்து கால்நடை வளர்ப் பவர்கள், விவசாயிகள் அதிக பயன் அடைய வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறி

னார்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் முகமது கனி, துணை இயக்குனர் தமிழ்ச்செல்வன், உதவி இயக் குனர் பாஸ்கரன், உதவி இயக் குனர் மனோகரன், வேளாண் மை இணை இயக்குநர் தனசேகரன், துணை இயக் குனர் மயில்வாகனன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்க வேண்டும் விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம்**

புதுக்கோட்டை,

விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்க வேண் டும் என்று கோரிக்கை விடுத்து விவசாயிகள் சங்க மாவட்டக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டக்குழு கூட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக்குழுக் கூட்டம் சோமையா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் செங் கோடன், மாவட்ட கவுரவத் தலைவர் அழகர்சாமி ஆகி யோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் மாத வன் வேலை அறிக்கை வாசித்தார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க உறுப் பினர்கள் அம்பலராஜ், நடராஜன், கணேசன், அந் தோணி சாமி, சேவுக பெரு மாள், காளிமுத்து, முருகா னந்தம், தங்கமணி உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண் டனர். கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;–

நிவாரணம்

காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, போர்க்கால அடிப்படையில் விவசாய பாதிப்பை கணக் கீடு செய்து நிவாரணம் வழங்க வேண்டும். சென்ற ஆண்டு பயிர் காப்பீடு வழங்கப் படாமல் விடுபட்ட விவசாயி களுக்கு காப்பீடு வழங்க வேண்டும்.வங்கி பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். இவ்வாண்டு சாகுபடிக்கு அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனையின்றி கடன் வழங்க வேண்டும், ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**50 பேருக்கு மானிய விலையில் புல் அறுக்கும் கருவி பெரம்பலூர் கலெக்டர் வழங்கினார்**



பெரம்பலூர்,

தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50 பேருக்கு மானிய விலையில் ரூ. 8 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பிலான புல்அறுக்கும் கருவிகளை பெரம்பலூர் கலெக்டர். தரேஸ் அஹமது வழங்கினார்.

தீவன அபிவிருத்தி திட்டம்

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 2013– 2014 –ம் ஆண்டிற்கான மாநில தீவன அபிவிருத்திதிட்டத்தின் கீழ் புல்அறுக்கும் கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி பெரம்பலூர் புதிய பஸ் நிலையம் எதிரில் உள்ள கால்நடை மருந்தகத்தில் நடைபெற்றது.

இந்த கருவி ஒன்றின் விலை ரூ.17, ஆயிரத்து 400ஆகும். இதில் மானியமாக ரூ.13 ஆயிரத்து 50 வழங்கப் படுகிறது.

இந்நிகழ்ச்சியில் 50 பய னாளிகளுக்கு மானியத்துடன் கூடிய ரூ.8 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பிலான புல் நறுக்கும் கருவிகளை கலெக் டர் தரேஸ் அஹமது வழங் கினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் நகர் மன்றத்தலைவர்சி.ரமேஷ், கால்நடைபராமரிப்பு உதவி இயக்குநர் மனோகரன் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நொச்சியம் உள்பட 4 பகுதிகளில் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகங்கள் திறப்பு**

பெரம்பலூர்,

நொச்சியம், நெய்க் குப்பை, திம்மூர் மற்றும் கை.களத்தூர் ஆகிய பகுதிகளில் தரம் உயர்த்தப்பட்ட கால் நடை மருந்தகங்களை பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அஹமது மற்றும் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் இரா.தமிழ்ச்செல்வன் திறந்து வைத்தனர்.

தரம் உயர்வு

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்ப்பட்ட நொச்சியம் ஊராட்சியில் நொச்சியம், நெய்க்குப்பை, திம்மூர் மற்றும் கைகளத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடை கிளை நிலை யங்களை தரம் உயர்த்தி கால்நடை மருந்தகங்களாக கலெக்டர் தரேஸ் அஹமது மற்றும் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர்இரா.தமிழ்ச்செல்வன் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் பேசியதாவது:

உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்

தமிழக முதல்–அமைச்சர் பெரம்பலூர் மாவட்டத்திற்கு புதிய பால் பண்ணை அமைக்க ஏற்கனவே உத்தர விட்டி ருக்கிறார். எனவே பெரம்பலூர் பகுதி மக்கள் பால் உற்பத்தியை அதிகப் படுத்த வேண்டும். அதற்கேற்ப கால்நடைகளை ஆரோக்கியமாக்கி பரா மரிக்க ஏதுவாக மானிய விலையில் உலர் தீவனங்களை தமிழக அரசு வழங்கி வரு கிறது

மேலும் நொச்சியம், நெய்க் குப்பை, திம்மூர் மற்றும் கைகளத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து வரும் கால்நடை கிளை நிலை யங் களை கால்நடை மருந்தகங் களாக தரம் உயர்த்தி தமிழக முதலமைச்சர் உத்தர விட்ட தன் அடிப்படையில் இன்று கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளது

அரசின் அறிவுரை

உங்கள் ஊரை சுற்றியுள்ள பகுதிகளில் இருக்கும் கால்நடைகளையும் இந்த கால்நடை மருந்தகங் களுக்கு அழைத்து வந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள லாம். மேலும் மாடுகள் வாங்க கடன் வழங்குவதற்கு தமிழக அரசின் அறிவுரையின்படி நட வடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

தமிழக முதல்–அமைச்சரின் இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் முறையாக பயன்படுத்திகொள்ள வேண் டும். இவ்வாறு அவர் தெரி வித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள் .மருதைராஜா, கிருஷணகுமார், வெண்ணிலாராஜா, மாவட்ட ஊராட்சித்துணைத்தலைவர் சேகர், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் சந்திரசேகர், உதவி இயக்குனர் மனோகரன், ஊராட்சி மன்றத் தலைவர் சங்கர் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கரூர் மாவட்டத்தில் 1¼ லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம்உற்பத்தி திட்டம்**

கரூர் மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி 1 லட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் டன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது என்று கலெக்டர் ஜெயந்தி கூறியுள்ளார்.

**அறிக்கை**

கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது:–

கரூர் மாவட்டத்தில் குளிர்கால பருவ மழை சராசரி அளவான 16.8மில்லி மீட்டர் கிடைக்கவில்லை. இருப்பினும் 12 ஆயிரத்து 313 எக்டரில் நெல், 17 ஆயிரத்து 108 எக்டரில் சிறு தானிய பயிர்கள், 7 ஆயிரத்து 381 எக்டர் பயிறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு தற்போது அறுவடை நடை பெற்று வருகிறது. கரூர் மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி இலக்கு 1 லட்சத்து 21 ஆயிரம் மெட்ரிக் டன் ஆகும். தற்போது மொத்த உற்பத்தி 1 லட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் டன் கிடைக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.

மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் உரக் கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 35 டன் யூரியா, 431 டன் டி.ஏ.பி., 624 டன் பொட்டாஷ் , 1,025 டன் கலப்பு உரங்கள் இருப்பில் உள்ளன.

**<u>மானிய தொகை</u>**

ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தில் 800 எக்டர் பரப்பளவில் 50 சதவீதம் மானியத்தில் 1,427 விவசாயிகளுக்கு ரூ.15 லட்சத்து 95 ஆயிரம் மதிப்பில், பழக்கன்று, காய்கறி விதை மற்றும் மலர் விதைகள் வழங் கப்பட்டு உள்ளது. தேசிய மூலிகைப்பயிர் சாகுபடி திட்டத்தில் 30 எக்டரில் காந்தள் மலர் சாகு படிக்கு 50 சதவீதம் மானிய தொகையாக ரூ.20 லட்சத்து 62 ஆயிரம், 10 எக்டர் கூர்க்கன் மூலிகை பயி ருக்கு 20 சதவீதம் மானியத் தொகையாக ரூ.86 ஆயிரம் என மொத்தம் 93 பயனாளி களுக்கு வழங்கப் பட்டுள் ளது. மேலும் நடப்பு நிதியாண்டில் வேளாண்மை எந்திர மயமாக்கும் திட்டத்தில் ரூ.59 லட்சம் நிதி பெறப்பட்டு 50 சதவீதம் மானியத்தில் கருவி கள் வழங்கப்பட்டுள்ளன.

**<u>பயிற்சி</u>**

நவீன வேளாண் கருவிகள் மற்றும் எந்திரங்கள் குறித்து 80 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 8 உலர்களம் கட்டுமானப் பணிகள் முடிக்கப் பட்டுள் ளன.

நீர்வள நல வளத் திட்டத்தின் கீழ் 13 உலர் களங்கள், 4 கிடங்குகள் அமைக்கும் பணி நடக்கிறது.

கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 19 ஆயிரத்து 679 விவசாயிகளுக்கு ரூ.11 ஆயிரத்து 38 லட்சம் பயிர் கடன் வழங்கப் பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக டிராக்டர், மினி டிராக்டர், பவர் டிரில்லர், களையெடுக்கும் கருவி, விசைத்தறி தெளிப்பான்கள் ஆகியவை நல்ல நிலையில் உள்ளன.

தேவைப்படும் விவ சாயிகள் இவற்றை வாட கைக்கு எடுத்துக் கொள்ள லாம்.

இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

**கொடைக்கானல் மலைப்பகுதியில் மழை: கும்பக்கரை அருவிக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



பெரியகுளம்,

கொடைக்கானல் மலைப்பகுதியில் பெய்த மழையால் பெரியகுளம் அருகே உள்ள கும்பக்கரை அருவிக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

கும்பக்கரை அருவி

தேனி மாவட்டம், பெரிய குளம் அருகே கும்பக்கரை அருவி அமைந்து உள்ளது. சிறந்த சுற்றுலா தலமாக இந்த இடம் திகழ்கிறது. இந்த அருவியில் குளித்து மகிழ்வதற் காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டும் இன்றி பிற மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள்.

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பெய்யும் மழை நீர் இந்த அருவிக்கு வரும். ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லை. இத னால் கும்பக்கரை அருவிக்கு தண்ணீர் வரத்து குறைவாகவே இருந்து வந்தது.

கடந்த சில மாதங்களாகவே அருவியில் குறைந்த அளவி லேயே நீர்வரத்து இருந்தது. தெருக்குழாயில் தண்ணீர் விழுவதை காட்டிலும் குறை வாகவே தண்ணீர் விழுந்தது. இதனால் அருவியில் குளிக்க முடியாமல் சுற்றுலா பயணி கள் ஏமாற்றம் அடைந்தனர்.

நீர்வரத்து அதிகரிப்பு

இந்த நிலையில் நேற்று முன்தினம் கொடைக்கானல் மலைப்பகுதியில் மழை பெய்தது. இந்த மழையால் கும்பக்கரை அருவிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று அருவியில் சுற்றுலா பயணிகளை மகிழ் விக்கும் அளவில் தண்ணீர் விழுந்தது. வெள்ளியை வார்த்தது போன்று தண்ணீர் கொட்டி யது.

பார்ப்பதற்கு அழகாகவும், குளிப்பதற்கு இதமாகவும் இந்த தண்ணீர் இருந்தது. இருப்பினும் இதுகுறித்து தெரியாததால் சுற்றுலா பயணிகள் வருகை குறை வாகவே இருந்தது. பெரிய குளம் மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த பொதுமக்கள் தங்களின் குடும்பத்துடன் வந்து அருவியில் ஆனந்தமாக குளித்துச் சென்றனர்.

**அதிக கறவை தரும் ஜெர்சி பசுக்களை கண்டறிந்து வாங்கும் முறை**



உலகில் காணப்படும் பல்வேறு பசு இனங்களில் தலைசிறந்த இனமாகவும் அதிக கறவை மற்றும் அனைத்து விதமான சுற்றுச் சூழலையும் சமாளித்து வாழக்கூடிய சக்தி கொண்ட இனமாக அடையாளம் காணப்பட்டது தான் ஜெர்சி பசு. உலகின் பெருவாரியான நாடுகளில் இன்று ஜெர்சி கலப்பின பசுவே பண்ணையாளர்களின் சிறந்த தேர்வாக இருக்கிறது. பால் பண்ணை அமைக்க திட்டமிடுபவர்கள் கலப்பின ஜெர்சி இன பசுக்களை வளர்க்கலாம்.

<u>உடலமைப்பு மற்றும் பொது குணங்கள்</u>

நேர்கோடான முதுகு, நேர்த்தியான தலை அமைப்பும் உறுதியான சிறந்த மடியுடன் அழகிய தோற்றம் கொண்டது ஜெர்சி. உடல் எடை 400 முதல் 820 கிலோ வரை எடை கொண்டது. இளஞ்சிவலை அல்லது தேன்சிவலை நிறத்தில் காணப்படும் இந்த பசுவினம் சில நேரங்களில் உடலில் வெள்ளை நிறப்பட்டைகளையும் கொண்டிருக்கும்.

கால் குளம்புகள் கருப்பு நிறத்தில் உறுதியுடன் காணப்படுகிறது. உறுதியான குளம்புகள் உள்ளதால் கால் மற்றும் குளம்பு தொடர்புடைய நோய்கள் ஜெர்சி பசுவினத்திற்கு குறைவாகவே ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. ஜெர்சியின் வால் முடி கருப்பு நிறத்தில் இருக்கும். வெப்ப மண்டல பகுதிகள் மற்றும் குளிர்மண்டல பகுதிகள் இரண்டிலும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு வாழும். அமைதியான குணமுள்ளது.

இந்த பசு சிறந்த மேய்ச்சல் திறன் கொண்டது. குறைந்த பராமரிப்பு செலவில் அதிக அளவு பால் தரும் இனமாகும். இனவிருத்தி திறனும் அதிகமுள்ளது. கன்று ஈனும் போது ஏற்படும் பிரச்சினைகளும் குறைவு. ஜெர்சி பசுவின் முதல் கன்று பிறப்பு 26 முதல் 30 மாதத்தில் ஏற்படுகிறது. இரண்டு கன்றுகளுக்கு இடைப்பட்ட கன்று இடைவெளி காலம் 12 முதல் 13 மாதமாக உள்ளது. சிறந்த சத்துக்களை கொண்ட பாலை இது தருவதால் பன்னீர், ஐஸ்கிரீம், தயிர் போன்ற மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கலாம்.

<u>அடையாளம் காணுதல்</u>

அதிக கறவை தரும் பசுக்களை சில அடையாளங்களை வைத்து அறிந்து வாங்கி விடலாம்.

ஜெர்சி பசுக்களுக்கு எடுத்துரைக்கப்பட்ட உடலின் நிறம், வெளிப்புற தோற்ற அமைப்பு போன்றவற்றை கவனித்து வாங்க வேண்டும்.

நாள் முழுவதும் தீவனம் தின்று நன்கு செரிமானமாகும் தன்மை கொண்ட கலப்பின ஜெர்சி பசுக்களை தேர்வு செய்ய வேண்டும். பண்ணையில் வளர்க்கப்படும் மாடுகளை வாங்கும் போது அந்த பண்ணையில் சராசரி பால் உற்பத்தியை விட அதிகம் பால் உற்பத்தி செய்யும் தலை ஈத்து, இரண்டாம் ஈத்து பசுக்களையே தேர்வு செய்ய வேண்டும்.

ஆந்த்ராக்ஸ் நோய், ரத்தநீர் நோய், தைலேரியா நோய், காய்ச்சல் நோய் அதிகம் ஏற்படும் பகுதிகளில் இருந்து பால் மாடுகளை வாங்க கூடாது.

கானை நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டு, உடல் முழுவதும் அதிக ரோமம் வளர்ச்சியுள்ள பசுக்களை தேர்வு செய்யக் கூடாது.

அடிக்கடி மாடுகளில் குறைப்பிரசவம், இளங்கன்று இறப்பு ஏற்படும் பகுதியில் கருச்சிதைவு நோய் பாதிப்பு இருக்கலாம். எனவே இத்தகைய பாதிப்புகள் இல்லாத கலப்பின ஜெர்சி பசுக்களை தேர்வு செய்ய வேண்டும். பால் மாட்டின் தலை ஒரு பங்காகவும், உடல் ஒரு பகுதி ஒன்பது பங்காகவும் கொண்ட உடல் அமைப்பில் உள்ள பால் மாட்டினை தேர்வு செய்ய வேண்டும்.

பால் மாட்டின் முதுகுப் பகுதி தலை முதல் வால் வரை ஒரே நேர்கோடாக இருக்க வேண்டும். முதுகுப் பகுதியில் அதிக வளைவுகள் உள்ள கலப்பின ஜெர்சி பசுக்களை தேர்வு செய்ய கூடாது.

கால்கள் திடகாத்திரமாக நன்கு பொருந்திய நிலையில் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு உள்ள மாடுகளை தேர்வு செய்ய வேண்டும்.

பால் மாட்டின் குளம்பு இறுகிய தன்மையுடன் குளம்பின் உட்பகுதி தேய்மானமின்றி பள்ளம் மேடுகள் இல்லாமல் இருக்க வேண்டும்.

பால்மடி முழுவதும் ஒரே சீரான பஞ்சு போன்று தடவி பார்க்கும் போது காணப்பட வேண்டும். பால் காம்பு ஒவ்வொன்றும் ஒரு கைப்பிடிக்குள் அடங்கும் அளவுடன் நான்கு காம்புகளும் இடைவெளியில் இருக்க வேண்டும்.

பால் கறந்து பரிசோதனை செய்யும் போது பால் மாடு அமைதியாக இருக்க வேண்டும். பால்காம்புகள் நான்கிலும் ஒரே சீரான வேகத்துடன் ஒரே திசையில் பால் வெளியேற வேண்டும். தினமும் பசுவின் பால் உற்பத்தியை நோட்டில் பதிந்து வைத்திருந்தால் கடந்த ஈற்றில் உற்பத்தி செய்த பாலின் அளவை பால் நோட்டை பார்த்து அறிந்து கொள்ள வேண்டும்.

டாக்டர்.எம்.எஸ்.சரவணன், அரசு உதவி கால்நடை மருத்துவர், மதுரை.

**வேளாண்மை கூட்டுறவு கடன்சங்கங்களில் கரும்பு, வாழை, நெல்பயிர்களுக்கு காப்பீடு கலெக்டர் சுப்பிரமணியன் தகவல்**



மதுரை,

கரும்பு, வாழை, நெல்போன்ற பயிர்களுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுவதாக கலெக்டர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

<u>பயிர்காப்பீடு</u>

மதுரை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மேம்பட்ட வேளாண்மை காப்பீட்டு திட்டத்தின்கீழ் அனைத்து விதமான தவிர்க்க இயலாத இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்பீடுகளுக்கு பயிர் காப்பீடு வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் நெல், நிலக்கடலை, பாசிப்பயிறு, மக்காச்சோளம், எள், மிளகாய், வாழை, கரும்பு பயிரிட வங்கிகடன் பெறும் மற்றும் வங்கிக்கடன் பெறாத விவசாயிகள் பயிர்காப்பீடு செய்யலாம்.

அதன்படி கரும்புக்கு 30.6.2014க்குள்ளும் மற்ற பயிர்களுக்கு வருகிற 28–ந்தேதிக்குள்ளும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி பயிர்காப்பீடு செய்து கொள்ளலாம்.

அந்தந்த பயிர்களுக்கு காப்பீடு செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் வருமாறு:–

நெல்: சக்கிமங்கலம், குன்னத்தூர், அப்பன்திருப்பதி, அரும்பனூர், திருப்பரங்குன்றம், தென்கரை, தனிச்சியம், வாலாந்தூர், சிந்துபட்டி, கூலப்பாண்டி, சத்திரப்பட்டி, குலமங்கலம், சமயநல்லூர்.

நிலக்கடலை: உசிலம்பட்டி.

<u>மானியம்</u>

பாசிப்பயறு: டி.கல்லுப்பட்டி, சேடபட்டி, அத்திபட்டி, எழுமலை.

மக்காச்சோளம்: மோதகம், டி.கல்லுப்பட்டி, சேடபட்டி, அத்திபட்டி, எழுமலை.

மிளகாய்: சேடபட்டி, அத்திப்பட்டி, பன்னிக்குண்டு, சிவரக்கோட்டை.

எள்: அத்திபட்டி, எழுமலை.

வெங்காயம்: பாலமேடு, பேரையூர், சேடப்பட்டி.

வாழை: நாகமலைபுதுக்கோட்டை, மதுரை மேற்கு, மேலூர், கீழவளவு, வெள்ளளூர், நீரேத்தான், தென்கரை, சோழவந்தான், தனிச்சியம், முடுவார்பட்டி, பாலமேடு, சத்திரப்பட்டி.

கரும்பு: கள்ளந்திரி, கீழவளவு, திருவாதவூர், வெள்ளளூர், தனிச்சியம், அலங்காநல்லூர், முடுவார்பட்டி, பாலமேடு, உத்தப்பநாயக்கனூர், உசிலம்பட்டி, கருமாத்தூர், வாலாந்தூர், சிந்துபட்டி, மோதகம், அத்திப்பட்டி, எழுமலை, சத்திரப்பட்டி.

விவசாயிகளுக்கு பிரீமியத்திற்கான விகிதம், மானியம் மற்றும் கூடுதல் விவரங்களை வேளாண்மைத்துறை அலுவலகங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் கேட்டு தெரிந்துகொள்ளலாம் என கலெக்டர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**கோடை காலத்தில் உளுந்தில் அதிக மகசூல் பெறுவது எப்படி? அதிகாரி விளக்கம்**



நெல்லை,

கோடை காலத்தில் உளுந்தில் அதிக மகசூல் பெறுவது எப்படி? என்பது குறித்து வேளாண் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து பாளையங்கோட்டை வேளாண் உதவி இயக்குனர் மகாலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>உளுந்து</u>

பிசானப் பருவத்தில் சாகுபடி செய்த நெற்பயிர் அறுவடைக்குத் தயாராக உள்ளது. இந்த நிலையில் அறுவடை எதிர்நோக்கி உள்ள விவசாயிகள் நஞ்சைத் தரிசு உளுந்து சாகுபடியில் மகசூல் பெற பரிந்துரைகள் பல வேளாண் துறையினரால் எடுத்துரைக்கப்படுகின்றன.

அதிக மகசூல் பெற அடிப்படையாக பயிர் எண்ணிக்கை சரியாக பராமரிக்கப்பட வேண்டும். குறிப்பாக சதுர மீட்டருக்கு 33 செடிகளுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

ஊட்டச்சத்து நிர்வாகம்

மண்ணில் ஈரப்பதம் இருக்கும் பட்சத்தில் அடி உரமாக ஏக்கருக்கு 1 மூடை ஜிப்சம் இட்டு பின் 10–20 கிலோ டி.ஏ.பி.யையும் இட வேண்டும். இவ்வாறு செய்தால் கால்சியம் மற்றும் சல்பர் பயிருக்குக் கிடைக்கும். இதனால் உளுந்து திரட்சி பெற்று அதிக எடை உள்ள மகசூலைப் பெற முடியும்.

டி.ஏ.பி. ஜிப்சம் தனித் தனியே ஓரிரு நாட்கள் இடைவெளியில் இடவேண்டும். அடி உரமிட முடியாமல் போகும் சமயத்தில், கோடை மழை பெய்யும் வாய்ப்பு இருப்பின் 2 சதவீதம் டி.ஏ.பி. உரச் கரைசலை (100 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ டி.ஏ.பி. கரைசல்) பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளித்தால் பூ உதிர்வதைத் தடுத்து அதிக மகசூலை பெற முடியும்.

பயிர் பாதுகாப்பு

பயிர் பாதுகாப்பு முறைகளைப் பொறுத்தவரை மண்ணில் ஈரப்பதம் இருக்கும் தருணத்தில் அல்லது பனிபடரும் மாலை நேரத்தில் ஏக்கருக்கு 10 கிலோ மாலத்தியான் தூள் தூவலாம் அல்லது தெளிக்க வசதி இருப்பின், அசாடிராக்டின் போன்ற வேம்பு கலந்த மருந்தினை தெளித்து மஞ்சள்தேமல் நோயினைப் பரப்பும் வெள்ளை ஈயினைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் ரோகார் 2 மில்லி லிட்டர் மருந்தினை பூக்கும் தருணத்தில் தெளிப்பதன் மூலம் காய்ப்புழுவினை கட்டுப்படுத்தலாம். வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த டிரைக்கோ டெர்மாவிட் கிலோவுக்கு 4 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்து விதைப்பது மிகவும் சிறந்த முறையாகும். இவ்வாறு வேளாண்துறையால் பரிந்துரை செய்யப்படும் முறைகளைப் பின்பற்றுவதால் சராசரியாக நஞ்சை தரிசில் ஏக்கருக்கு 250–300 கிலோ வரை மகசூல் பெற வாய்ப்பு உள்ளது. எனவே விவசாயப் பெருமக்கள் இப்பரிந்துரையினை கடைப்பிடித்து உளுந்தில் நல்ல மகசூல் பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.